தமிழின் முதல்தர
வார இதழ்
# தீபம்
www.deepam.lk
விலை 20 ரூபா • தீபம் 21 • 13.12.2015

RAJANI TRAVEL

இந்தியாவில் திருமண
வைபவத்திற்கு ஏற்ற
திருமண மண்டபம் மற்றும்
தங்குமிடம் போன்றவற்றை
பெற்றிடவும், இந்தியாவில்
உள்ள பிரசித்திப் பெற்ற
சுற்றுலா தலங்களையும்
பார்வையிட சகல
வசதிகளையும்
செய்து தருகின்றார்கள்...
(0094) 774166369



# வடக்கின் சென்னையாகுமா கிளிநொச்சி?

பெருவெள்ளத்தில் மூழ்கிய சென்னை இன்னும் வழமைக்குத் திரும்பாமல் மூச்சுத்திணறிக் கொண்டிருக்கிறது. அந்தக் காட்சிகளை செய்தி ஊடகங்களில் எல்லோரும் பார்த்து உச்சுக் கொட்டினோம். இன்னும் நீர்வடியாமல் குளிரில் நடுங்கிக் கொண்டிருக்கிறது சென்னை. இந்த அனர்த்தங்களிற்கு இயற்கையை குறைசொல்லி என்ன பயன்? சும்மாயிருந்த சென்னையை இயற்கையை வதைத்தா?

தொடர்ச்சி 4-ம் பக்கம்



நமது எம்.பி மட்டக்களப்பு 7
வெளிவருமா சி.ரவீந்திரநாத் கொலை மர்மம் 10
அம்பலமாகும் அவன்கார்ட் 18
உள்ளே...

# நீரின்றி அமையாது உலகு

வலிகாமத்தின் நிலத்தடி நீர் விவகாரம் மீண்டும் விவாதப்பொருளாகியுள்ளது. நிலத்தடி நீரில் எண்ணெய் கலப்புள்ளதென எழுந்த சர்ச்சையை தொடர்ந்து வடமாகாணசபை நியமித்த நிபுணர்குழுவின் அறிக்கை கடந்த வாரம் வடக்கு முதல்வர், விவசாய அமைச்சரிடம் கையளிக்கப்பட்டு பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் சுன்னாகம் தெடக்கம் தெல்லிப்பழை வரையான சர்ச்சைக்குரிய பகுதி நீரில் கழிவு எண்ணெய் கலப்பில்லையென கூறப்பட்டுள்ளது. மாறாக உடல்நலத்திற்கு தீங்கு விளைவிக்கும் நைத்திரேற்றுக்கள், மலக்கிருமிகள் கலப்புள்ளதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிலமாதங்களின் முன்னர் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் அறிக்கையொன்று வெளியாகியிருந்தது. அந்த அறிக்கையின்படி, இதே பகுதி நீரில் கழிவு எண்ணெய் கலந்துள்ளதாக உறுதியாக அறிவிக்கப்பட்டிருந்தது. அதுபோல பல்கலைகழக அறிக்கையும் எண்ணெய் கலப்புள்ளதாக கூறியது.

இந்த அறக்கைகள் அனைத்துமே அறிக்கைகளுமே ஒரே பகுதியை, விவகாரத்தை மையப்படுத்தியே மேற்கொள்ளப்பட்டிருந்தன. எனினும், இரண்டுவிதமான முடிகள் கிடைத்துள்ளன. தற்போது வெளியாகிய அறிக்கையில், முன்னைய அறிக்கைகள் தொடர்பாக எதுவும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

நீங்கள் அருந்தும் நீர் பாதுகாப்பானதா என்பதை ஒவ்வொரு குடிமகனுக்கும் உணர்த்தும் அவசிய பொறுப்பு அரசுகளுடையது. அரசு கட்டமைப்புக்களில் உட்கார்ந்திருக்கும் மக்கள் பிரதிநிதிகளின் தலையாய கடமையது. அந்த உரிமை வலிகாமத்தில் நீர் மாசு அபாயத்தை எதிர்கொண்ட மக்களிற்கு கிடைக்கவில்லை.

நிலத்தடி நீரில் கழிவு எண்ணெய் கலந்துள்ளதா இல்லையா? தேசியவடிகாலமைப்பு சபை, பல்கலையின் அறிக்கை சரியா? வடமாகணசபை நிபுணர்குழுவின் அறிக்க சரியா? என்ற வாதப்பிரதிவாதங்கள் நமக்கு அவசியமற்றவை. அதற்குள் நாம் புகவில்லை. நாம் அருந்தும் நீர் மாசற்றதா? அருந்தக்கூடியதா? என்ற வெகுசாதாரண மக்கள் கேள்விகளிற்கு விடையுள்ளதா? இல்லையெனில் ஏன்? இதுதான் நமது கேள்வி.

அறிக்கைகள் எதிர்எதிர் முடிவுகளை சொல்வதென்பதே, ஒன்று அல்லது இரண்டு அறிக்கை பொய்யானதென்பதுதானே அர்த்தம். அப்படியானால் எது பொய்யான அறிக்கை?

முன்னர் அதிக எண்ணெய் கசிவு இருந்தது, தற்போது இல்லையென ஒரு வாதத்திற்கு வைத்துக் கொண்டால் கூட, (முன்னைய அறிக்கைகளிற்கும் தற்போதைய அறிக்கைக்குமிடையில் கிட்டத்தட்ட ஒருவருட இடைவெளியுள்ளது) தற்போதைய அறிக்கையில் அது குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். அது பற்றி எதுவுமே குறிப்பிடப்படவில்லை.

எண்ணெய கசிவு ஆரம்பிக்கப்பட்டதாக கூறப்பட்ட சமயத்தில், பல்வேறு நிபுணர்கள் கூறியதாக நிறைய தகவல்கள் பரவின. அந்த நீரை அருந்தினால் தோல்வியாதி, புற்றுநோய் உள்ளிட்ட பல நோய்கள் ஏற்படலாமென மக்களை மிரட்சியடைய செய்யும் தகவல்கள் போட்டிபோட்டுக் கொண்டு வந்தன. இப்பொழுது இன்னொரு நிபுணர்குழு அதனை அடியோடு மறுக்கிறது. இந்த இடத்தில் வடக்கு எதிர்கட்சி தலைவர் கூறிய கருத்தொன்று முக்கியமானது. 'மக்கள் விஞ்ஞானிகள் அல்ல'. அவர்களே ஆய்வு செய்து, அவர்களே அனைத்தையும் தீர்மானித்து கொள்ளுங்கள் என்ற பாணியில் அரசு நிறுவனங்கள் செயற்பட முடியாது.

தங்கள்வீட்டு கிணறுகளில் உள்ள நீரை என்ன செய்யலாமென்பதை ஒவ்வொரு குடிமகனும் எந்த குழப்பமுமின்றி அறிந்து வைத்திருக்க வேண்டும். அதற்காகத்தான் அரசுகள் நிபுணர்குழுக்களை அமைக்க வேண்டும். மாறாக, மக்களை மேலும்மேலும் குழப்பத்தில் ஆழ்த்தவல்ல. தற்பொழுது இதுதான் நடந்திருக்கிறது. ஒவ்வொரு நிபுணர்குழுவும் மக்களின் குழப்பத்தை மேலும்மேலும் அதிகரித்துக் கொண்டுதான் செல்கிறது.


ஆரம்பத்திலிருந்தே இந்த விவகாரத்தில் இரண்டு வேறு கருத்துக்கள் உள்ளன. தங்கள் வீட்டு கிணறுகளில் கழிவு எண்ணெய் தாக்கம் உள்ளதாக பாதிக்கப்பட்ட பிரதேச மக்கள் அனைவரும் உறுதியாக நம்புகிறார்கள். அடிமடியில் கட்டிவைத்துள்ள நஞ்சாகவே எல்லோரும் தத்தமது கிணறுகளை உணர்ந்தார்கள். மக்களின் நம்பிக்கையை வலுப்படுத்தும் விதமாகவே ஆரம்பத்தில் எல்லாம் நடந்தன.

இதன்பின்னர்தான் வடமாகாணசபை இந்த விவகாரத்தை கையிலெடுத்தது. நிலத்தடி நீரில் கழிவு எண்ணெய் கலப்பில்லை என்பதைப் போன்ற கருத்தொன்றே ஆரம்பத்திலிருந்து வடமாகாணசபையின் சில தரப்பினரிடம் இருந்தது. அவர்கள்தான் இந்த விவகாரத்தில் நேரடி தொடர்புபட்டவர்கள்.

இந்த விவகாரத்தில் இருவேறு கருத்துநிலையிருக்கும் பொழுது எல்லா தரப்பையும் ஒன்றுகூட்டி, சர்ச்சைகளிற்கு முற்றுப்பள்ளி வைக்கும் பேராளுமைகள்தானே நமக்கு தேவை. ஆனால், வடக்கு மாகாணசபை நடந்ததோ வேறுவிதத்தில். ஏட்டிக்குப்போட்டியான ஒரு தரப்பாக மாத்திரமே செயற்பட்டுள்ளது. இந்த விவகாரத்தில் மாகாணசபை தோல்வியையே சந்தித்துள்ளது. எல்லாச் சர்ச்சைக்கும் முற்றுப்புள்ளி வைத்திருக்க வேண்டிய மாகாணசபை, ஒரு நிபுணர்குழுவை அமைத்து, அவர்களின் அறிக்கைமூலம் பிரச்சனைக்கு 'கமா'தான் இட்டுள்ளனர்.

அறிக்கைகளினால் நீரை சுத்தம் செய்ய முடியாது.

தீபம்
211, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
☎ 0212216633 ✉ deepamdesk@gmail.com



**Kandiah Arunthavabalan**

மருத்துவர்களின் பணப்புறக்கணிப்பு பற்றிய பதிவுகள் தொடர்பாக

.....................................................................

உயர் கல்வியில் மிகவும் கடினமான துறை மருத்துவம். எத்தனையோ தடைகளைக் கடந்து வரும் இவர்களுக்கான ஊதியம் ஒப்பீட்டளவில் மிகவும் குறைவானது. பெரும்பாலானவர்கள் அர்ப்பணிப்புடனேயே பணியாற்றுகின்றனர். வெளிநாட்டு வாய்ப்புகள் பல இருந்தும் எமக்காகப் பணியாற்றுபவர்கள்.
அவர்களுக்கு வழங்கப்படும் வரப்பிரசாதங்கள் சமூகநலன் சார்ந்ததே.
பணிப்புறக்கணிப்பினால் பாதிப்பு ஏற்பட்டது உண்மை. எனினும் அவசரப் பணிகள் பாதிக்கப்படவில்லை. அவர்களது பணி தடைப்படக்கூடாது எனில் அவர்களுக்காக நாம் குரல் கொடுத்திருக்க வேண்டும். க.பொ.த (சா/த) கூடசித்தியடையாத அரசியல்வாதிகள் பன்மடங்கு வரப்பிரசாதங்களை அனுபவிப்பதையும் கவனிக்க வேண்டும். நாட்டில் எவருக்கும் சிறப்புச்சலுகைகள் இல்லையெனில் பிரச்சினை எழாது.


Like Comment Share



150 வருடங்களின் முந்தைய திருகோணமலை நகரம்

# க்ளிக் பக்கம்

கிளிநொச்சியில் ஏ9 வீதியில் எடுத்தது. வாழ்க்கையை கொண்டு செல்ல சளைக்காமல் ஓடிக்கொண்டிருக்கும் மூதாட்டி. தைரியத்திற்கும், துணிவிற்கும் இலக்கணமான இவரை பார்த்து வியந்தேன். எவ்வளவுதான் பிரச்சனைகள் இருந்தாலும், மாறாத புன்னகைதான் வாழ்வின் ரகசியம்.
**என்னைப்பற்றி:** நான் அருட்தந்தை செங்கன் தேவதாசன். பரந்தன் மெதடிஸ்த திருச்சபையில் இறைப்பணியாற்றுகிறேன். புகைப்படங்களும் எடுத்து வருகிறேன்.



படப்பிடிப்பாளர்: **செங்கன் தேவதாசன்**
இடம்: **கிளிநொச்சி**



குறிப்பு: உங்கள் படங்களையும் அனுப்பி வையுங்கள் deepamdesk@gmail.com




கடந்த வாரம் தீபத்தின் சமூகவலைத்தளங்களில் அதிகம் பகிரப்பட்ட விடயம் இது. இந்தியாவின் பெங்களூரில் நடந்தது. அங்குள்ள நிறுவனமொன்றில் பணியாற்றிய சமயத்தில் இந்த யுவதி சக ஊழியர் ஒருவரை காதலித்திருக்கிறார். விபத்தில் சிக்கி காதலன் உயிரிழந்துள்ளார். காதலனின் மரணச்சடங்கில் கலந்து கொண்டுவிட்டு, காலை 11 மணியளவில் அலுவலகம் வந்தவர் சிறிது நேரத்தில் 11வது மாடியிலிருந்து குதித்து தற்கொலை செய்துள்ளார்.

**Evin Ajith**
காதல் இருக்கும் வரை உங்கள் இருவரின் இதயங்கள் அழியாது.காதலின் அழியா சின்னம் ஆவீர்கள்.உயிரோடு தான் இணைய முடியவில்லை இறந்த பின்பாவது இருவரும் ஒன்றாகலாம் என தன் உயிரையும் காதலனுடன் எடுத்து சென்று விட்டாய் .....உங்களின் ஆத்மா ஒன்று சேர என்னுடைய பிரார்தனையை சமர்பிக்கிரேன்.

**Suresh Kettavan**
great love Rip fr both

**Nowshad AL**
Muddale

facebook



**Suguna Diwakar**
ரஜினிகாந்தைத் தொடர்ந்து இயக்குனர் ஷங்கரும் வெள்ள நிவாரண நிதியாக 10 லட்சம் ரூபாய் அளித்துள்ளார். பாவம், இருவரும் இந்த மாதச் செலவை எப்படித்தான் சமாளிக்கப்போகிறார்களோ?



**Rajasekaran Devibharathi**
கடந்த முப்பது வருடங்களாகச் சூழலியல் ஆர்வலர்கள் புவி வெப்பமடைதல் அதன் விளைவுகள் பற்றித் தொண்டைத் தண்ணி தீரக் கத்திக்கொண்டிருக்கிறார்கள். நாம் அவர்களைக் கோமாளிகளாகத்தான் பார்த்துக்கொண்டிருக்கிறோம்.



**Iroshan Puviraj**
வேலை கிடைக்குமா? கிடைக்காதா ? எண்டத தாண்டி நம்ம சிகூஷி ஐ அக்சப்ட் பண்ணுவாங்களா ? இல்ல ரிஜக்ட் பண்ணுவாங்களா? எண்ட கவலை தான் வதைச்சு வாட்டுது.



**கு.விநாயகமூர்த்தி**
நல்ல தத்ததுவார்த்தமான வரிகளை உள்ளடக்கிய 'பீப்' பாடலை இயற்றி,இசையமைத்து,பாடிய அனிருத்,சிம்பு குழுவிற்கு மனமார்ந்த வாழ்த்துக்கள்.. உங்களையெல்லாம் ஏன்டா இந்த வெள்ளம் தூக்கல..



**Pirainila Krish**
ஒண்டில் கண்தெரியாம போகோணும் இல்லாட்டி கண் ஒழுங்கா தெரியோணும். அதவிட்டுட்டு இரண்டுக்கும் இடையில இருந்தா இதுதான் பிரச்சினை. ஒருநாளைக்கு கண்ணாடி இல்லைன்னா எவ்வளவு கஸ்ட்டம். எல்லாம் மங்கலா.... வே தெரியுது மைலோட்.



**Wickramarajasingam Manivasan**
பத்து மணிக்கு படுக்கையை விட்டு எழும்பிறவனை சோம்பேறினு நினைக்காதீர்கள். அவனோட கனவு பெரிதாக இருந்திருக்கலாம்!



**கருப்பு கருணா**
சல்மான்கான் நிரபராதி... இதனால் அறியப்படும் நீதி இன்னான்னா..குமாரசாமிகள் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கிறார்கள்.



**Rimaz Ahamed**
மழை இலங்கையில் பெய்து இலங்கை வெள்ளத்தில் மூழ்கியிருந்தால் "சிங்களவனுக்கு இன்னமும் வேண்டும்" என்றிருப்பர் தமிழக மக்கள்!



**Suges Vivekananthan**
யாருப்பா அது Indian team, Chennai team supporters ??
அஸ்வின் சுழல்ல South Africa சிக்கிற்று என்றாங்கள் ஆனா சென்னை மக்கள் அடைமழையில் சிக்கினது தெரியாம இருந்திருக்கு.

Like Comment Share



கிளிநொச்சி இயக்கச்சி கோட்டையிலிருந்து தென்கிழக்காக ஏழு கிலோமீற்றர் தொலைவில் உள்ள நித்தியவெட்டை, முள்ளியான காட்டுபகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள சிதைவடைந்த பண்டைக்கால வீடு. அரண்டனை, இயக்கச்சி கோட்டையுடன் தொடர்பான சிறைக்கூடம், பண்டைக்கால மக்கள. குடியிருப்பு என பலவாறாக கூறப்படுகிறது.

## வாவ்.. வட்ஸ்அப்

ஒரு பையன் தன்னோட காதலிய சந்திக்க போகும் போது,
அவன் காதலிகூட இருக்கிற தோழிகள் அடிக்கிற கமெண்ட்ஸ்

1. ஹேய், அந்த தலையாட்டி பொம்மை எப்படி நடந்து வறான் பாறேன்.

2. அங்க பாருடி, உன்ஆளு என்ன ராம்ராஜ் காட்டனுக்கு மார்க்கெட்டிங்கா பண்ணுறான். எப்போபாரு ஒயிட் சர்ட்.

3. \"ATM\" மெஷின் வருதுடி.

4. அடியே, உன் ஆளு இவ்ளோ ஒல்லியா இருக்கானே, உன்ன எப்படி காப்பாத்துவான்.

5. நடைய பாரு நசுங்கி போன வாத்து மாதிரி.. இப்போ... பசங்க பத்து பிரண்ட்ஸோட உட்காந்திட்டு இருக்கும்போது, தன் நண்பனோட காதலி நடந்து வருவா. அப்போ அந்த பத்து பசங்களும் ஒரே வார்த்தைய தான் சொல்வாங்க.\"மச்சி தங்கச்சி வருது, நீ பேசிட்டு இரு. நாங்க அப்பறமா வர்றோம் டா. \"#

நீதி: பசங்க மனசு வேற யாருக்குமே வராது. நண்பனோட காதலியை தங்கையாக நினைப்பது ஆண் சமுதாயம் தான்




## எண்ணிக்கை

**5000** முல்லைத்தீவில் விவசாயம் செய்யப்படாமல் தரிசாகும் நிலத்தின் ஏக்கர் கணக்கு

**225** இந்தியாவிலிருந்து திரும்பி கிளிநொச்சியில் மீள்குடியேறிய குடும்பங்கள்

**4** அமைதிக்கு திரும்பும் நாடுகளில் தெற்காசியாவில் இலங்கையின் இடம்

மட்டக்களப்பில்
தீபம் பத்திரிகையை
பெற்றுக்கொள்ள
மற்றும்
பத்திரிகைக்கான
விளம்பர
தொடர்புகளுக்கு...




ஜெயகுமார்
ஜெயா ஸ்டுடியோ
கல்முனை வீதி,
கல்லடி,
மட்டக்களப்பு.
(0094) 0771868094

1-ம் பக்க தொடர்ச்சி

‘மழை வெள்ளத்தை குறை சொல்லாதீர்கள். அது ஏரிகளாவும், குளங்களாகவும் இருந்த தனது இருப்பிடங்களை தேடுகிறது’ என குளிரில் உறைந்தபடி சென்னை வாசியொருவர் பேஸ்புக்கில் ஆற்றாமையில் எழுத, அது வைரல் ஹிட்டானது. ஏரிகளை ஆக்கிரமித்து, வெள்ளநீரோட்டப்பகுதிகளை சூறையாடி, வடிகாலமைப்பில் மெத்தனமாக இருந்து, அனைத்திற்குமாக விலை கொடுத்தது சென்னை.



### இதேவிலையை கிளிநொச்சியும் கொடுக்குமா?

ஏனெனில், சென்னையின் கதைக்கு ஒருவரியும் குறைவில்லாத கதைதான் கிளிநொச்சியின் கதையும். ஏரிகள் குளங்களை ஆக்கிரமித்து, வெள்ளநீரோட்டப் பகுதிகளை சூறையாடி, வடிகாலமைப்புக்கள் இல்லாமல், நிலத்தடி நீரை சேமிக்காமல்ஞ் இப்படி சென்னையின் கதையையே தனது கதையும் ஆக்கிய கிளிநொச்சிக்கு, சென்னையின் முடிவு ஏற்படுமா?

இதுதான் இன்றைய ‘உயிர் போகும்’ கேள்வி.

### ‘கிறுகிறு’ கிளிநொச்சி

வடக்கு மாவட்டங்களில் மிக இளைய மாவட்டம் கிளிநொச்சி. முன்னர் யாழ்ப்பாணத்துடனிருந்து, பின்னர் பிரிக்கப்பட்டது. காடாகவும், விவசாய நிலமாகவும் இருந்த பிரதேசம். கிளிநொச்சி உள்ளிட்ட வன்னிநிலம் முழுவதும் குளங்களை ஆதாரமாக கொண்ட குடியேற்றத்திட்டங்கள். இந்த குடியேற்றத் திட்டங்கள் ஆரம்பித்ததுடன் கிளிநொச்சியின் கதையும் ஆரம்பிக்கிறது.

**ஆனால், குளங்களை ஆக்கிரமிப்பவர்களில் பெரும்பாலானவர்கள் வசதிபடைத்தவர்களே. இவர்களால்தான் மண் நிரப்பி, அவற்றை மேட்டு நிலமாக்க முடியும். அத்தோடு ‘மேலிட’ தொடர்புகள் மூலமாக பிறகு இந்தக் காணிகளை மக்கள் குடியிருப்புக் காணிகள் என உத்தரவாதப்படுத்தி, அதற்கான உரிமப்பத்திரத்தையும் எடுக்க முடியும். இதற்கு வசதியும் பதவியும் உள்ளவர்கள்தான் முன்னிற்கிறார்கள் என்கிறார்கள் நகரத்தின் நலன் விரும்பிகள். அத்துமீறுவோரின் ஆக்கிரமிப்பை அதிகாரிகள் கண்டுகொள்ளாமல் விட வைக்கும் சூட்சுமம் தெரிந்தவர்கள் இந்த வசதி பதவி வாய்த்தவர்களே.**

பொதுவாகவே கிளிநொச்சியின் வரலாறு எழுச்சியும், வீழ்ச்சியுமாக மாறிமாறி நிகழ்ந்தது. 1986, 1990, 1996, 1998, 2009 களில் பெரும் போர்கள் கிளிநொச்சியில் நிகழ்ந்தன. அப்பொழுதெல்லாம் கிளிநொச்சி பகுதியளவாகவோ, பெருமளவாகவோ தரைமட்டமானது. என்றாலும் மீண்டும் முன்னையதிலும் வீச்சாக எழுவது கிளிநொச்சியின் ஸ்பெஷல்.

1950 ஆம் ஆண்டின் பின்னர்தான் பெரும்பாலான கிளிநொச்சி வீதிகளின் முதலாவது கட்டம் அமைக்கப்பட்டது. ஆனால் துரதிஸ்டம், அவற்றில் பெரும்பாலனவை யுத்தம் முடியும்வரை புனரமைக்கப்படவேயில்லை

வீதியின் கதை அப்படி இருந்தாலும், கிளிநொச்சி ‘கிறுகிறு’ வென வளர்ந்து சென்றது. நவீன வைத்தியசாலை வந்தது. தரமான பாடசாலைகள் வந்தன. பிரதான நகரங்களிற்கிடையில் முறையான தரைத்தொடர்பு அமைந்தது. மாணவர்கள் நல்ல பெறுபேறுகள் எடுத்தனர். கல்வியியலாளர்கள் உருவானார்கள். பெருநகரைப் போல வீதியும், வீதி விளக்குகளும் ஆச்சரியமூட்டின. பல்கலைக்கழகம் வந்தது. தொழில்துறை மையங்களும் தொழில் நுட்பக் கல்லூரியும் வளர்ந்து கொண்டிருக்கிறது. மற்ற மாவட்டங்களிற்கு இணையாக கிளிநொச்சியும் விரைந்து வளர்ந்தது.

விடுதலைப்புலிகளின் காலத்தில் அவர்களின் நிர்வாகத் தலைநகராகவே மாறியது. சர்வதேச பிரதிநிதிகள், சுற்றுலா பயணிகள் என பரபரப்பு நகராக அந்தக் காலத்தில் மாறியது.

சமாதானகாலத்தில் கிளிநொச்சி குறிப்பிடத்தக்க ‘கல்நகரமாக’ மாறியது. இந்தக்காலத்தில் பெரும்பாலான வீடுகள், கல்வீடுகளானதுடன், பெரும் வர்த்தக நிலையங்களும் எழுந்தன.

### குளத்தை காணோம்

1950 இன் பின்னர் கிளிநொச்சியின் சனத்தொகை படிப்படியாக விரிவடையத்தொடங்கியது. நிறைய குடியேற்றங்களும் அமைக்கப்பட்டன. அரச குடியேற்றங்களை விட, தனிநபர் அத்துமீறல் குடியேற்றங்கள்தான் கணிசமாக நிகழ்ந்தவை. தனிநபர் குடியேற்றங்களின் நோக்கம் வசதியான, பெரிய நிலம் மட்டுமே. வேறெதனையும் கவனிப்பதில்லை.

**கிளிநொச்சியின் பெரும்பாலான பகுதிகளில் வடிகாலமைப்பு வசதிகளே கிடையாது. இயற்கையான வெள்ளப்பாதைகள் மட்டுமே உள்ளன. அதனை மறித்து கட்டிடங்கள் எழுந்ததால், வெள்ளம் தேங்கிவிடுகிறது.**

இதுதான் பிரச்சனையின் ஆரம்பம். கிளிநொச்சியில் இன்று அமைந்துள்ள பல குடியிருப்புக்கள் சட்டவிரோதமானவை. நீர் நிலைகள் அல்லது நீரோட்ட பாதைகளில் அமைக்கப்பட்டவை. குடியிருப்புக்கள் அமைக்கப்படும்போது, பெரும்பாலும் நீரோட்டப்பாதை திசைதிருப்பப்படுகிறது அல்லது வழிமறிக்கப்படுகிறது.

விவசாய நகரமான கிளிநொச்சியின் அபிவிருத்தி, அதனை மையப்படுத்தியே ஏற்படுத்தப்பட வேண்டும். குளங்கள் அமைக்கப்பட்டபோது, இரண்டு விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டன. ஒன்று, குளத்தில் நீர் நிறைந்தால் வெளியேறிச் செல்ல வேண்டும். இரண்டு, ஆபத்தான கட்டங்களில் குளத்துநீரை திறந்துவிட்டால் சென்று சேர வேண்டும். ஆனால் இப்பொழுது இரண்டுமே சிக்கலாகிவிட்டது.



பஞ்சபூதங்களில் ஒன்றான நீர் மகாசக்தி வாய்ந்தது. தன்னுடன் மோதுபவர்களை அது முற்று முழுதாக மூழ்கடித்துவிடும். இயற்கையுடன் மோதி மனிதன் வெற்றிபெறவே முடியாதென்பதையே ஒவ்வொரு மாரிகாலத்திலும் வெள்ளம் உணர்த்துகிறது.

கிளிநொச்சி பொதுவைத்திய சாலையின் பின்பகுதி, அதாவது ஏ9 வீதியின் கிழக்குப் பகுதி வெள்ளவடிகால் பகுதி. இரணைமடு குளத்திலிருந்தும் கனகாம்பிகைக் குளத்திலிருந்தும் மேலதிகநீரை வெளியேற்றும்போது, வெள்ளம் ஓடிச்செல்லும் பகுதி. இது நீர்ப்பாசனத்திணைக்களத்திற்கு உரிய பகுதி. எனினும், இந்தப்பகுதி தற்போது முழுமையான மக்கள் குடியிருப்பாகிவிட்டது. வெள்ளநீர் வடிந்தோட முடியாமல் தேங்குவது இதனால்த்தான்.

இதுதவிர, கிளிநொச்சியில் பல சிறு குளங்கள் ‘முன்னாள்’ குளங்களாகிவிட்டன. அவை இருந்த தடயமே இல்லை. கிளிநொச்சி நகரத்திற்கு நெருக்கமாக இருந்த திருநகர் குளம் இன்று இல்லை. அந்தப்பகுதி நிரவப்பட்டு குடியிருப்புக்கள் வந்துவிட்டன. அந்தப் பகுதியில் ஒரு குளம் இருந்ததென்பதற்கு சாட்சியாக, ‘பண்ட் றோட்’ என்ற வீதிப்பெயர் மட்டுமாகி மிஞ்சி உள்ளது. இப்படி நிறைய சிறிய குளங்கள் கிளிநொச்சியில் காணாமல் போய்விட்டன. திருநகர் குளத்திற்கு நெருக்கமாக இருந்த உதயநகர் கிழக்குக் குளத்துக்கும் இதுதான் கதி.

கிளிநொச்சியின் பெரும்பாலான பகுதிகளில் வடிகாலமைப்பு வசதிகளே கிடையாது. இயற்கையான வெள்ளப்பாதைகள் மட்டுமே உள்ளன. அதனை மறித்து கட்டிடங்கள் எழுந்ததால், வெள்ளம் தேங்கிவிடுகிறது. நகரப்பகுதியில் தற்பொழுதுதான் ஓரளவு வடிகாலமைப்பு வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன. எனினும் புறநகர்ப்பகுதிகளில் கூட இப்பொழுதும் முறையான வடிகாலமைப்பு வசதிகள் இல்லை. இதனால் உருத்திரபுரத்துக்கு மழைக்காலங்களில் போவதை நினைக்கவே முடியாது.

வட்டக்கச்சியில் தெருக்கள் எல்லாம் அறுத்தோடிகள் என்ற நிலை. அக்கராயனின் கதையைச் சொல்லவே தேவை





யில்லை. அந்த அளவுக்கு மோசம். அதற்கப்பால் கண்ணகைபுரம், நஞ்சண்டகாடுபோன்றஇடங்களில் வெள்ளத்தின் ஆட்சிதான்.

கிளிநொச்சியின் பெரும்பாலான வீடுகளிற்கு மதில்கள் கிடையாது. சிலகாலத்தின் முன்னர்வரை மக்களிடம் ஒரு வழக்கமிருந்தது. மதில் இல்லாதவர்கள் மாரிமழைக்கு முன்னதாக வீட்டுவளவைச் சுற்றி, முழங்கால் உயரத்திற்கு மண்அணை அமைப்பார்கள்.வேலிகளைச் சீர்ப்படுத்தி, நீரைத் தேக்கக்கூடிய வரம்புகள் இருக்கும்.வளவிற்குள் தேங்கும் நீர் நிலத்தில் உறிஞ்சப்படும். நிலத்தடி நீரும் சேமிக்கப்பட்டதாகி



**இதையெல்லாம் தற்போது அலட்சியம் செய்தால் அதற்கான விளைவை சென்னையைப்போல ஒரு நாள் எல்லோரும் நிச்சயம் கொடுக்கத்தான் வேணும். மக்களை ஏமாற்றலாம். நிர்வாகத்துக்குத் தண்ணி காட்டலாம். ஆனால், தண்ணியே மற்றவர்களுக்குத் தண்ணி காட்ட வெளிக்கிட்டால்...**

விடும். இந்தமுறை தற்போது வழக்கொழிந்து வருகிறது. வெள்ளம் தாறுமாறாக ஓடுவதுடன், நிலத்தடி நீர் சேமிப்பும் இல்லாமல் போய் விட்டது. மழைக்காலங்களில் வெள்ளம் வளவுகளை ஊடறுத்து வீடுகளைச் சுற்றி ஓடும்.

இதனால்தான் பெரும்பாலான பகுதியும் வெள்ளக்காடாக உள்ளது. வளவுகளுக்குள் வரும் வெள்ளத்தை எல்லோரும் வீதிக்குத் திருப்பி விடுகிறார்கள். வீதிகள் வெள்ளக் காடாகின்றன.

குடாநாட்டில் இருப்பதைப் போல தரைக்கு கீழான முருகைக் கற்பாறைகள் கிளிநொச்சியில் கிடையாது. அங்கே ஒரு வகையான களித்தன்மையான நிலமே உண்டு நிலக்கீழ் நீரோட்டங்கள் நிலத்தில் நெகிழ்வுத்தன்மையை ஏற்படுத்தும். இதனால் மாரிமழைக்காலத்திலேயே பலவீதிகள் வெடித்து சேதமடையத் தொடங்கிவிட்டன. அண்மையில் புனரமைக்கப்பட்ட வீதிகளிற்கும் இதுதான் கதி.

கிளிநொச்சி போன்ற இடங்களிற்கு கொங்கிறீட் வீதிகள்தான் பொருத்தமானவை என துறைசார் நிபுணர்கள் கூறுகிறார்கள். என்றாலும், அதற்கு ஆகும் செலவுதான் அதிகாரிகளின் கையை பிசைய வைக்கிறது. என்றபோதும் கிளிநொச்சி உள்ளடங்கலாகவன்னியின் குறிப்பிடத்தக்க இடங்களில் முன்னோட்டமாக கொங்கிறீற் வீதிகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. ஏனைய வீதிகளையும் அப்படி வடிகாலமைப்பு வசதியுடன் அமைக்க வேண்டும்.

இதற்கு இப்பொழுது நல்ல உதாரணமாக இருப்பது கிளிநொச்சி நகரில் உள்ள உதயநகர் கிழக்கில் உள்ள முதலாம்,இரண்டாம் குறுக்கு வீதிகள். சிறந்த வீதியமைப்பும் வடிகாலமைப்பும் இங்கே உண்டு. இதைப்போல ஏனைய இடங்களுக்கும் கிடைக்குமென்றால் பாதைகளும் போக்குவரத்தும்

**இரணைமடுக்குளத்திலிருந்து நீரோடும் பிரதேசம், குளக்கட்டின் வடக்கு பக்கத்தில் உள்ள வில்சன் குடியிருப்பு, மருதநகர், வட்டக்கச்சி மேற்கிலுள்ள மக்கள் குடியிருப்புக்களாகும். கனகாம்பிகை குளத்திலிருந்து நீர்வரும் பகுதி இரத்தினபுரம் மற்றும் கிளிநொச்சி குளத்தையண்டிய பகுதிகள்.**

பாதிப்படையாது.

இல்லையென்றால், சாதாரண மழையென்றாலே எல்லா இடமும் வெள்ளக்காடாகிவிடும் கதைதான் நடக்கும். குளம் அமைந்துள்ள பகுதிகள், நீர் வடிந்தோடும் பிரதேசங்கள், மேய்ச்சல் நிலப்பகுதி போன்ற முக்கிய இடங்களில் யார்தான் குடியேற முற்பட்டாலும் அதைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

எப்பொழுதாவது அனர்த்தங்கள் வருவது இயற்கையானதுதான். ஆனால், எப்பொழுதும் அனர்த்தம் வருகிறதென்றால் மனிதன் இயற்கையுடன் உரசிப்பார்க்கிறான் என்பதே அர்த்தம். அதிகாரத்தில் உள்ளவர்கள், பணம்படைத்தவர்களே இயற்கைக்கு அதிககேடு விளைவிப்பவர்கள். எனினும், விளைவுகளை சந்திப்பதென்னவோ ஏழைகள்தான்.


இயற்கையின் வாழிடங்களை அபகரித்தால், அதன் சீற்றம் தாங்கிக்கொள்ள முடியாதென்பதையே சமகாலம் உணர்த்தும் செய்தி. விழித்துக்கொள்ள தாமதமானால் அதற்கான விலையையும் கொடுக்க நேரிடும். - **தீபம் குழு**



காணாமல் போனவர்களை கண்டறியும் ஆணைக்குழுவின் விசாரணைகள் யாழ் மாவட்ட செயலகத்தில் நடந்தபோது சில காட்சிகள்





அண்மையில் கட்டுநாயக்க 'Eagles Lagoon View' ஹோட்டலில் இடம்பெற்ற சுயாதீன ரூபவாஹினி திட்ட பணிப்பாளர் தனுஸ்க ராமநாயக்கவின் திருமண நிகழ்வில் ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர். தொரமடலாவ என்ற பிரபல தொலைக்காட்சி நிகழ்ச்சியில் தோன்றும் ஜோதிடர் இந்திக்க தொட்டவத்தவும் இந்நிகழ்வில் கலந்து கொண்டார். அன்றைய தினம் இந்திக்க தொட்டவத்த அதிகம் மது அருந்தியதால் அவரது வாயில் இருந்து ஜோதிடம் மழையாய் பொழிந்துள்ளது. ஆனால் தான் அதிகம் மது அருந்தவில்லை என இந்திக்க முணுமுணுத்து வருகிறார்.

இதன்போது ஜனாதிபதி மைத்திரி பாலவுடன் சுமூகமாகப் பேசிக் கொண்டிருந்த இந்திக்க தொட்டவத்த, 'உங்களுக்கு ராஜ யோகம் இல்லை. மஹிந்த ராஜபக்ஷ தனது ஜென்ம கேந்திரம் கெட்டுப் போயிருந்த காலத்தில் தேர்தல் வைத்தார். அதனால்தான் நீங்கள் அதிகாரத்திற்கு வந்தீர்கள். உங்களது நல்லாட்சி அரசாங்கம் இன்னும் ஆறு மாதத்தில் விழும். எனது ஜோதிடம் பிழைத்தால் நான் ஜோதிடம் சொல்வதை நிறுத்துவேன்' என்று கூறியுள்ளார். இதன்போது ஜனாதிபதியின் முகம் சிவந்து போயுள்ளது. தொட்டவத்தவை அங்கிருந்து அழைத்துச் சென்ற அமைச்சர் சம்பிக்க தனது வாகனத்தின் மூலம் வீட்டுக்கு அழைத்துச் சென்றுள்ளார்.

இந்திக்கவை வீட்டுக்கு அனுப்புவதற்கு முன்னர் தனது ஜாதகத்தை அவரிடம் கொடுத்து 2020ம் ஆண்டு தனக்கு ஜனாதிபதி ஆகும் வாய்ப்பு உள்ளதா என பார்க்கச் சொல்லியுள்ளார். சுமார் 30 நிமிடங்கள் சம்பிக்கவின் ஜாதகத்தை பரிசீலித்த இந்திக்க, 'இந்த கேந்திரத்தில் எவ்வித இராஜயோகமும் இல்லை. அங்கும் இங்கும் தாவி அமைச்சுப் பதவி வகிப்பது மாத்திரமே உங்களுக்கு நடக்கும். உங்கள் தொடர்பில் எந்த தலைவருக்கும் நம்பிக்கை இல்லை. நீங்கள் கோட்டாவுடன் ஒன்னுமண்ணாக இருந்தவர் தானே? இன்று அவரை சிறைக்கு அனுப்ப முன்னின்று உழைப்பது நீங்கள் தானே? என்று பதில் கூறியுள்ளார்.

தொட்டவத்தவின் கதையில் ஆடிப்போன சம்பிக்க, அவரது பாதுகாப்பு அதிகாரிகளை அழைத்து தொட்டவத்தவை உடனே வீட்டுக்கு அழைத்துச் செல்லுமாறு பணித்துள்ளார்.

மெகாபொலிஸ் அமைச்சர் சம்பிக்கவின் ஸ்பொன்சராக கோடீஸ்வர வர்த்தகர் ஆத்தர் சேனாநாயக்க உள்ளார். தனது அமைச்சுக்கு வரும் அனைத்து Spot Tenderகளையும் ஆத்தருக்கு வழங்கி 2020 ஜனாதிபதித் தேர்தலில் தனது செலவுகள் அனைத்தையும் கவனிக்கும் பொறுப்பை ஆத்தருக்கு வழங்குவதே சம்பிக்கவின் திட்டம். சம்பிக்கவின் கனவினது இணைப்பாளராக வித்யா அமரபால ஆவார். வித்தியா அமரபால என்பவர் ஆத்தர் சேனாநாயக்கவின் நிறுவனத்தில் பணிப்பாளராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

செய்தித்திண்ணை




பலவருடங்களாக நிலவிய அகிலவிராஜ் காரியவசம் மற்றும் தயாசிறி ஜயசேகர இடையேயான பிரச்சினையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிறைவு செய்து வைத்துள்ளார்.

குருநாகல் மலியதேவ வித்தியாலயத்தில் அண்மையில் நடந்த வருடாந்த நடன நிகழ்விற்கு ஜனாதிபதி பிரதம அதிதியாக கலந்து கொண்டார். விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி மற்றும் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக அழைக்கப்பட்டிருந்தனர்.

நிகழ்வு தினத்தன்று தனது வாகனத்தில் வருமாறு தயாசிறி மற்றும் அகிலவிராஜுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்திருந்தார். பல காலம் பேசிக் கொள்ளாத தயாசிறி அகிலவிராஜ் ஒரு வாகனத்தில் சென்றது பார்ப்பவர்களை ஆச்சரியமடைய வைத்தது. தயாசிறி அகிலவுடன் ஜனாதிபதி நிகழ்வு இடத்திற்குச் சென்றார்.

இருவரையும் ஒன்றுசேர்க்கவே தான் அப்படி செய்ததாகவும், பொய்யாக ஏன் இருவரையும் பிரித்து வைக்க வேண்டும் என்று ஜனாதிபதி கூறியுள்ளார். அகிலவிராஜ் தனது உரையில் நமது விளையாட்டுத்துறை அமைச்சர் என்று விழித்ததுடன் வெளியேறும் போது இருவரும் நெருக்கமாக உரையாடியபடி சென்றனர்.

இந்த காட்சியை கண்ட பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே 'இன்றிலிருந்து தயாசிறிக்கு கடவுள் துணை' என்று பாராளுமன்றில் கூறினார். மஹிந்தானந்தவின் கருத்துக்கு பதிலளித்த அகில'சரி சரி. அது எங்கள் பிரச்சினை. நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்' என்று கூறியுள்ளார்.



தொடரும் அடைமழையை தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்டத்தின் வவுனிக்குளம் நிரம்பி, வான் பாய தொடங்கியுள்ளது.






# நமது எம்.பி மக்கள் விருது

அரசியலில் எதுவெல்லாம் சகஜமோ இல்லையோ, மிக சகஜமானது தேர்தலின் பின்னர் வாக்களித்தவர்களை கண்டுகொள்ளாமல் இருப்பது. மீண்டும் அடுத்த தேர்தலில்த்தான் வாக்கள மகாஜனங்களை அரசியல்வாதிகள் நினைப்பார்கள்.

உங்களிற்காகவே வாழ்வேன், உங்களின் அத்தனை பிரச்சனைகளையும் தீர்த்து வைப்பேன் என விழுந்து கும்பிடாத குறையாக வீட்டுப்படியேறி வாக்குக்கேட்டு, எம்.பியானவர்கள் மக்களுடன் இப்பொழுது எப்படியான உறவில் உள்ளனர்?

இப்படியொரு அலசலிற்காக கிளம்பினோம்.

ஏதோ ஒரு பிரச்சனை. சாதாரண பொதுமகன் ஒருவர் தான் வாக்களித்த எம்.பியை சந்திக்க விரும்புகிறார். எம்.பியின் மாமா, எம்.பிக்கு தெரிந்தவர், எம்.பியின் வலதுகை போன்ற இடைத்தரகர்கள் இல்லாமல் எம்.பிக்களில் யாரை மக்கள் சுலபமாக சந்திக்கலாம்? மக்களின் கருத்துக்களை கேட்டு தீபம் குழு தயாரித்த இறுதிப்பட்டியல்.

**இந்த வாரம் மட்டக்களப்பு**





















**1.எஸ்.வியாழேந்திரன்**

தமிழ்தேசிய கூட்டமைப்பின் இன்னொரு புதியமுகமான வியாழேந்திரனே மட்டக்களப்பின் மக்கள் எம்.பி. தனியார் கல்விநிலைய ஆசிரியர். அதனால் நிறைய மக்கள் தொடர்பு இருந்து, பழம்தின்று கொட்டை போட்ட அரசியல்வாதிகளையெல்லாம் மண்கவ்வச் செய்தார். எம்.பியான பின்னரும் பழைய மக்கள் தொடர்பை பேணிக்கொண்டிருக்கிறார். மட்டக்களப்பு நகரத்தில் அலுவலகம் உள்ளது. மிக இலகுவாக தொடர்பு கொள்ளத்தக்கவர். நேரிலோ, தொலைபேசியிலோ தொடர்பு கொள்ளலாம். மக்கள் பிரச்சனைகளில் முன்னின்று குரல் கொடுக்கிறார். அலுவலகங்களிற்கு வருபவர்களின் பிரச்சனைகளையும் அக்கறையாக தீர்த்து வைக்கிறார். கல்விப்பின்புலமோ என்னவோ அதிக இளைஞர்கள் அவருடன் நிற்கிறார்கள். அதனால் மக்கள் பிரச்சனைகள் உடனுக்குடன் அவரது காதிற்கு செல்கிறது. பிரச்சனைக்குரிய இடங்களிற்கு நேரில் செல்வதே அவருக்கான ஆதரவின் இரகசியம். அரசியல் பிரச்சனை, சமூகப்பிரச்சனை, பொருளாதார பிரச்சனை என என்ன பிரச்சனையென்றாலும் சூடான அறிக்கைகள் விட்டும் ஸ்கோர் செய்கிறார்.

**2.சீ.யோகேஸ்வரன்**

தமிழ்தேசிய கூட்டமைப்பின் சார்பில் இரண்டாவது தடவையாகவும் தேர்வானவர். 2010 தேர்தலில் வெற்றிபெற்ற தமிழ்தேசிய கூட்டமைப்பின் எம்.பிக்கள் 3 பேரில், இம்முறை தேர்வானவர் இவர் ஒருவர்தான். கல்குடா தொகுதி அவருடையது. அங்கு பிரதான அலுவலகம் உள்ளது. மட்டக்களப்பு நகத்திலும் ஒரு அலுவலகம் உள்ளது. எந்நேரமும் சென்று சந்திக்கலாம். மக்கள் பிரச்சனைகளில் முன்னின்று குரல் கொடுப்பவர். அதிரடி அறிக்கைகளிற்கும் பெயர் போனவர். மக்கள் பிரச்சனைகள் என்றால் சம்பவ இடத்திற்கே சென்றுவிடுவார். அலுவலகங்களில் வைக்கப்படும் விண்ணப்பங்களையும் கிரமமான முறையில் தீர்த்து வைப்பதில் அக்கறை செலுத்துகிறார். இந்து இளைஞர் பேரவையின் மாவட்டத் தலைவர். அதிக இந்து அடையாளம் மற்ற மதத்தினர் இவரை நெருங்குவதில் தயக்கத்தை ஏற்படுத்துகிறதென்ற விமர்சனமும் உள்ளது.

**3.என்.சிறிநேசன்**

தமிழ்தேசிய கூட்டமைப்பின் புதியமுகம். இம்முறைதான் தேர்தலில் குதித்தார். விருப்பு வாக்கில் மாவட்டத்திலேயே முதலிடம் பெற்று ஆச்சரியமூட்டினார். கல்வித்துறை சார்ந்தவர் என்பதால் ஏற்கனவே ஓரளவு பொதுமக்கள் நெருக்கம் இருந்தது. மட்டக்களப்பு திருகோணமலை வீதியில் அவரது அலுவலகம் உள்ளது. எப்பொழுதும், யாரும் செல்லலாம். பெரும்பாலும் அலுவலகத்தில் அவரை சந்திக்கலாம். என்ன பிரச்சனையென்றாலும், அக்கறையாக கேட்டு, நடவடிக்கை எடுக்கிறார். இதனால் மக்களும் ஆர்வமாக அலுவலகம் செல்கிறார்கள்.

**4.எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ்**

மட்டக்களப்பின் நீண்டகால எம்.பி. மகிந்த ஆட்சிக்கெதிராக ஊரே திரண்டபோதும், ஆதரவாக தனித்தவில் வாசித்து மூக்குடைபட்டார். இதனால் கடந்த தேர்தலில் மண்கவ்வினார். இறுதியில் தேசியப்பட்டியல் எம்.பியானார். இப்பொழுது இராஜாங்க அமைச்சர். காத்தான்குடியில் பிரதான அலுவலகம் உள்ளது. ஏறாவூர், ஓட்டமாவடி பகுதிகளிலும் அலுவலகங்கள் உள்ளன. யாரும் சென்று சந்திக்கலாம். அமைச்சர், கொழும்பில் வசிப்பது போன்ற காரணங்களால் இப்பொழுது நேரில் சந்திப்பது சற்று சிரமம். அலுவலங்களிற்கு சென்று முறையிட்டால் உடனடியாக அமைச்சரின் காதிற்கு செல்கிறது. மாதத்தில் மூன்றுமுறையாவது அலுவலகங்களிற்கு விசிற் அடித்து மக்கள் பிரச்சனைகளை கவனிக்கிறார்.

**6.எம்.எஸ்.எஸ்.அமீர்அலி**

தற்போது கிராமிய, பொருளாதார பிரதியமைச்சர். அகில இலங்கை மக்கள் காங்கிரஸில் போட்டியிட்டு இம்முறை வெற்றிபெற்றவர். மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தின் இறுதியில் எம்.பியானவர். கட்சியை 'கைக்குள் போட்டுக்கொள்ள' அஸ்வரை அகற்றிவிட்டு எம்.பியாக்கினார்கள். இம்முறை வெற்றிபெற்றதன் பின்னர் பிரதியமைச்சராகிவிட்டார். கொழும்பிலேயே அதிகம் தங்குகிறார். இதனால் அவரை சந்திப்பது அவ்வளவு சுலபமானதில்லை. இருந்தாலும் கட்சி அலுவலகங்களிற்கு சென்றால், பிரச்சனைகளை தீர்த்துக் கொள்ளும் வசதி செய்யப்பட்டுள்ளது.

**5.எஸ். செய்யித் அலிசாகிர் மௌலானா**

நீண்ட அரசியல் அனுபவம் கொண்ட முஸ்லீம் காங்கிரஸ் எம்.பி. அதேபோல அதிககட்சியில் தேர்தலில் நின்றவர். சிறிலங்கா சுதந்திரக்கட்சி, ஐக்கிய தேசியக்கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிகளில் பல தேர்தல்களை சந்தித்தவர். முன்னொரு காலத்தில் இலகுவாக சந்திக்கலாம் என்ற நிலையிருந்தது. அது தற்போது சற்று குறைந்துவிட்டது. கட்சி அலுவலகங்களில் சந்திக்கலாம். அலுவலகத்தில் முறைப்பாடுகள் பதிவு செய்தால் அவரது கவனத்திற்கு செல்கிறது. என்றாலும், தற்போது அவ்வளவு இலகுவாக சந்திக்கலாமென்ற நிலையில்லை என்பது பலவீனமே.

# கண்ணை மறைத்த தொலைபேசி காதல்

**ஒரு குற்றச்சம்பவம்**

எஸ்.என்.நிக்ஷன்

எந்தப்பொருளும் அதை எப்படி பாவிக்கிறோம் என்பதை பொறுத்துத்தான் நமக்கு நல்லது செய்கிறதா, தீயது செய்கிறதா என்பதை தீர்மானிக்கலாம். கொலையாயுதங்களை தங்கள் வீட்டு அலங்காரத்திற்கு பாவிப்பவர்களும் இருக்கிறார்கள். அலங்கார பொருட்களை கொலை அயுதமாக பயன்படுத்துபவர்களும் இருக்கிறார்கள்.

தொலைபேசியை நீங்கள் எந்த வகைக்குள் அடக்குறீர்கள்? யாழ்ப்பாணத்தை சேர்ந்த இந்த யுவதி நிச்சயம் நல்லது செய்ததென் சொல்ல மாட்டார்.

கைத்தொலைபேசி காதலால் வீணாண சர்ச்சையில் சிக்கிய யாழ்ப்பாணத்தை சேர்ந்த யுவதியொருவரின் கதையிது.

பதினெட்டு வயதுடைய யுவதி ஒருவரின் வாழ்வல் கைத்தொலைபேசி விளையாடிய சம்பவமிது. அண்மையில் சுதுமலையில் நடந்தது. கைத்தொலைபேசியால் தொடர்பு ஏற்பட்டு அந்தத் தொடர்பு பின்னர் காதலாக மாறி, அந்தப் பெண் ஒரு இடத்திற்கு அழைக்கப்பட்டு பாலியல் துஸ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ள சம்பவமொன்று தற்போது வெளிச்சத்திற்கு வந்திருக்கின்றது.

சுதுமலையைச் சேர்ந்த யுவதிக்கு ஒருநாள் திடீரென அறிமுகமற்ற இலக்கமொன்றிலிருந்து அழைப்பு வந்திருக்கிறது. யாராக இருக்குமென நினைத்தபடி 'ஹலோ' சொன்னார். மறுமுனையில் ஒரு ஆண்குரல். அறிமுகமில்லாதது.

'வாலிப வயதில் இதெல்லாம் சகஜம்' என்பதை போல பெரும்பாலான இளவயதுக்காரர்கள் இப்படியான சம்பவத்தை கடந்துதான் வந்திருப்பார்கள். ஆனால், பெரும்பாலானவர்கள் இப்படியான அழைப்புக்களுடன் அதிக நேரம் கதைப்பதில்லை. சுதுமலை யுவதி தொடர்ந்தும் பேசினார். அதுதான் வினையாகியுள்ளது.

'உங்களை எனக்கு தெரியும்', 'யாரென்று சொல்லுங்கோ பார்ப்பம்' என்பதைப் போல பேசத்தொடங்கி, இருவரும் மணிக்கணக்காக பேசத் தொடங்கியுள்ளனர். சிலநாளிலேயே இருவரும் நண்பர்களாகிவிட்டனர்.

சிலநாளில் மறுமுனை ஆண்குரல் தன்னை அறிமுகம் செய்தது. யாழ்ப்பாணம் கொட்டடியை சேர்ந்தவராம். இன்னும் திருமணமாகவில்லை என்றார். கொட்டடிகாரர் நல்ல கெட்டிக்காரனாக இருந்தார். யுவதிக்கு மெல்லமெல்ல வலைவிரித்து, இதற்குள் இழுத்து வீழ்த்தினார்.

> **அவளை முச்சக்கரவண்டிக்குள் ஏற்றினான். ஆட்கள் தொல்லையில்லாத இடத்தில் நின்று பேசலாமென சொல்லி, ஆள்நடமாட்டமற்ற இடத்திற்கு வண்டியை செலுத்தினான்.**

இப்படியே எத்தனைநாள் முகம் பார்க்காமல் பேசிக் கொண்டிருப்பது? முகம் காட்டினால் என்ன? என 'சென்ரிமென்ற்' வலைவிரித்தார். யுவதிக்கு தட்ட முடியவில்லை. நேரில் சந்திக்க சம்மதம் தெரிவித்தார்.

முதல் சந்திப்பில் வாலிபர் நாகரிகம் காட்ட, பின்னர் இருவரும் அடிக்கடி சந்திக்க தொடங்கினார்கள். நட்பும் காதலானது. வாலிபன் விரித்த மோசவலையில் யுவதி அறியாமலே வீழ்ந்தார்.

முதல் திட்டம் பலித்ததும், யுவதியை முழுமையாக 'கபளீகரம்' செய்யும் இரண்டாவது சூழ்ச்சித்திட்டத்தை அரங்கேற்றினான் காதலன்.



ஒருநாள் தொலைபேசியில் அழைப்பை ஏற்படுத்தி, காதல் வசனங்கள் பேசியுள்ளான். 'உன்னை பார்க்க வேண்டும் போலுள்ளது' என்றான். நேரில் பார்க்க வருகிறேன் என, யுவதியின் வீட்டருகே முச்சக்கரவண்டியில் வந்து நின்றான். யுவதியும் வீட்டில் எதோ சொல்லிவிட்டு காதலனை சந்திக்க சென்றாள்.


அவளை முச்சக்கரவண்டிக்குள் ஏற்றினான். ஆட்கள் தொல்லையில்லாத இடத்தில் நின்று பேசலாமென சொல்லி, ஆள்நடமாட்டமற்ற இடத்திற்கு வண்டியை செலுத்தினான். காதலனில் அவளிற்கும் அவ்வளவு நம்பிக்கை.

ஆள்நடமாட்டமற்ற இடமொன்றில் முச்சக்கரவண்டியை நிறுத்திவிட்டு, தனது வலையை விரிக்க ஆரம்பித்தான். இனிக்க இனிக்க பேசினான். அவனது நோக்கமெல்லாம், அன்று யுவதியை முழுமையாக அனுபவிப்பதே.

நீண்டநேரமாக பேசிக் கொண்டிருந்து விட்டு, தனக்கு தாகமாக இருப்பதாக சொல்லியுள்ளான். தாகத்தை யுவதியும் உணரும் விதமாக பேசியுள்ளான். தனக்கும் தாகமென்றாள். 'உனக்காகவே கொண்டு வந்தேன்' என குளிர்பானமொன்றை பருகக் கொடுத்துள்ளான். காதலன் கொடுத்ததாயிற்றே. யுவதியும் குடித்துவிட்டார். சிறிதுநேரத்தில் கண்கள் சுழல, அவனது தோளில் சாய்ந்துவிட்டார்.

பின்னர்தான் தெரிந்தது, அது மயக்க மருந்து கலந்த பானமென்பது. யுவதி மயக்கமடைந்ததும், அருகிலிருந்துபாழடைந்த வீடொன்றிற்குள் கொண்டு சென்று துஷ்பிரயோகம் செய்துள்ளான். யுவதி மயக்கம் தெளிவதற்குள் மீண்டும் முச்சக்கர வண்டிக்குள் கொண்டுவந்து இருத்தியுள்ளான். சிறிதுநேரத்தில் யுவதி மயக்கம் தெளிந்ததும், அவரை ஆசுவாசப்படுத்தி வீட்டிற்கு அருகில் இறக்கிவிட்டு சென்றுவிட்டான்.

வீட்டிற்கு சென்றதும், யுவதியின் உடலில் மாற்றங்களை அவதானித்துள்ளார். உடனே பெற்றோரிற்கு தெரியப்படுத்தியுள்ளார். உடனடியாக யாழ்ப்பாண போதனா வைத்திய சாலைக்கு யுவதி கொண்டு செல்லப்பட்டதுடன், பெற்றோர் மானிப்பாய் பொலிசில் முறைப்பாடு பதிவு செய்தனர்.



உடனடியாக விசாரணையை ஆரம்பித்த பொலிசார், கொட்டடியை சேர்ந்த காதலனை கைது செய்தனர். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் அதிர்ச்சி தகவலொன்று வெளியானது. ஏற்கனவே திருமணமாகி, மூன்று குழந்தைகளின் தந்தையே, இப்படி வேடமிட்டு ஒரு யுவதியின் வாழ்வில் விளையாடியுள்ளார். பின்னர் மல்லாகம் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு, தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

என்னதான் வீடுகளில் கட்டுப்பாடு, கண்காணிப்பு இருந்தாலும் பிள்ளைகளை வழிதவறி அழைத்துச் செல்லும் இரகசிய வழிகாட்டி போல சிலசமயங்களில் தொழில் நுட்பம் அமைந்துவிடுகிறது. அன்றாடம் பல்வேறு சம்பவங்கள் இப்படி நடந்து கொண்டிருக்கிறது. அவற்றில் சிலதுதான் செய்தியாகின்றது.

தற்போது பாடசாலை மாணவர்களே அதிகளவில் கைத் தொலைபேசிகளைப் பயன்படுத்தி வருகின்றனர். கைத் தொலைபேசி என்ற சிறந்த தொடர்பாடல் சாதனத்தை பயன்படுத்த தெரியாமல் தமது தலையிலேயே மண்ணள்ளி போடுபவர்களும் உள்ளனர்.

இந்த நிலையை தவிர்க்க, அநாமதேய அழைப்புக்கள் வரும் போது அவற்றைத் தவிர்ப்பதும் அல்லது அவற்றிற்கு மீள தொடர்பை ஏற்படுத்தாமல் இருப்பதும் பாதுகாப்பானதாகும். அனாமதேய அழைப்புக்களிலேயே வாழ்க்கையை கழித்துக் கொண்டிருக்கும் இளைஞர் கும்பல்கள் நம்மத்தியில் உள்ளன. கடைகளில் தொலைபேசிக்கு மீள்நிரப்பல் செய்ய செல்லும் இளம்பெண்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

தொலைபேசியுடன் தொடர்புடைய கடைகளில் அதிகளவில் இளைஞர்கள்தான் மொய்த்திருப்பார்கள். இப்படியான இடங்களில் யுவதிகளின் இலக்கம் பகிரங்கப்படுமாயின், வீணான தொல்லைகள் ஏற்படும்.

அதேபோல, சமூக வலைத்தளங்களில் தமது இலக்கங்களை பகிரங்கமாக குறிப்பிடுவதை பெண்கள் தவிர்க்க வேண்டும். அத்துடன் அனாவசிய அரட்டைகளை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

சற்றே அவதானமாக இருந்தால் வீணாண சிக்கல்களிலிருந்து பெண்கள் தங்களை பாதுகாத்து கொள்ளலாம்.

மாங்குளம் கற்குவாரி வீதி போக்குவரத்து செய்ய முடியாத நிலையில் உள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். அண்மைகால அடைமழை காரணமாக வீதியின் குறுக்காக வெள்ளம் பாய்ந்து கொண்டிருக்கிறது. பலநாட்களாக இதேநிலைமை நீடிப்பதால் மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. தற்போது க.பொ.த சாதாரணதர பரீட்சை நடப்பதால் மாணவர்கள் அதிக சிரமத்தை சந்திக்கின்றனர்.

கற்குவாரி கிராமமக்கள் தமது அத்தியாவசிய தேவைகளிற்கு மாங்குளம் நகரத்திற்கு செல்ல வேண்டிய நிலை உள்ளது. இருக்கின்ற ஒரேவீதியும் இந்த நிலையில் இருப்பதால் அதிக சிரமப்படுவதாக கூறுகிறார்கள்.

இந்தப்பகுதியில் பாலம் அமைத்து, வீதியையும் உயர்த்தினால்த்தான் போக்குவரத்து பிரச்சனை சீர்செய்யப்படும் என்பது மக்களின் கருத்து. ஒவ்வொரு வருட பருவமழைக்காலத்திலும் இந்தப்பகுதி வெள்ளத்தில் மூழ்குவது வாடிக்கையாகிவிட்டது. வீதி மட்டுமல்ல, வீடுகளும் வெள்ளத்தில் மூழ்குகின்றன.

தம்மை வெள்ளத்திலிருந்து காப்பாற்றுங்கள் என்பது மக்களின் நீண்டநாள் கோரிக்கை. அதிகாரிகளின் அசமந்தமும் தொடர்கிறது. பொறுப்பானவர்களே, இது உங்களின் பார்வைக்கு!



## மக்கள் குரல்



மட்டக்களப்பின் கோரளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலர் பிரிவிலுள்ள காயங்கேணி, கீரிகுடா கடற்கரை வீதியின் காட்சிகள் இவை. மிக நீண்டகாலமாக புனரமைக்கப்படாத இந்த வீதியால் பிரயாணம் செய்வதென்பது, ஒரு சாகச நிகழ்வுதான்.

வாகரை பிரதான வீதியிலிருந்து கடற்கரை நோக்கி செல்லும் இந்தவீதிய தினமும் பெருமளவானவர்கள் பயன்படுத்தி வருகிறார்கள். போக்குவரத்து பாதையென்றே சொல்ல முடியாத சேற்றுப்பகுதியாக மாறிவிட்ட இந்தவீதியால் பயணம் செய்வதில் மக்கள் படும்பாட்டிற்கு இந்த படங்களே சாட்சி.

இந்தவீதியை புனரமைத்து தருமாறு அதிகாரிகள், அரசியல்வாதிகள் அனைவரிடமும் மக்கள் நீண்டகாலமாக கோரிக்கை விடுத்து வருகின்றபோதும், அது அவர்கள் காதில் விழவில்லை. தற்போதைய மழைக்காலத்தில் போக்குவரத்து செய்ய முடியாமல் மக்கள் பெரும் சிரமங்களை சந்தித்து வருகின்றனர்.


மக்களின் பிரச்சனைகளை தீர்த்து வைப்பது அதிகாரிகளின் கடமையல்லவா!

தீபம் வார இதழ்
விளம்பர தொடர்புகளுக்கு
☎ 077 538 5494

WALAWWA REST
Gov. Reg : 3738
100% Safe
A/C. Non A/C Rooms
Foods & Beverage
Attached Bathroom
800 ரூபாவிலிருந்து...
Bus Stant
U.C Ground
To Jaffna
Vavuniya General Hospital
Clock Tower
To Trincomalie
Walawwa Rest
இல. 64, ஆஸ்பத்திரி பின் வீதி, வவுனியா.
Tel / Fax : 024 2224877 | Mobile : 077 7865616

தீபம் தொலைக்காட்சி குழுமத்தில் இருந்து வெளிவரும் தீபம் வார இதழின் பின்வரும் பணி நிலை வெற்றிடங்களிற்கு விண்ணப்பங்கள் கோரப்படுப்படுகின்றன.

01. சந்தா முகாமையாளர் (Subscription manager)
02. சந்தா சேகரிப்பாளர்கள் ( subscription collectors)
(வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், யாழ் நகர், தீவகம், கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, கொழும்பு, நுவரெலியா, பதுளை, புத்தளம்)
03. விளம்பர மற்றும் சந்தைப்படுத்தல் முகாமையாளர்
( மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார், கொழும்பு, புத்தளம்)



இன்றே தொடர்பு கொள்ளுங்கள்
021 221 6633
தீபம்

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி
நிர்வாக பணிப்பளர்
நோர்ச்சி மீடியா (பிறைவேட்) லிமிடெட்
211, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

# கிழக்கு மாகாண பல்கலைக்கழக உபவேந்தர்பேராசிரியர் சி.ரவீந்திரநாத் அவர்களின் மறைவுக்கான மர்மம் இனியாவது வெளிவருமா?





**ப. ஈஸ்வரநாதன்**
B.Sc (Hons) Agric. Dip.in.Edu
**ஓய்வு பெற்ற விவசாய விஞ்ஞான பட்டதாரி**
Raveens EMC
Karaveddy

கிழக்கு மாகாண பல்கலைக்கழக உபவேந்தராக இருந்த போரா சிரியர் சிவசுப்பிரமணியம் ரவீந்திரநாத் அவர்களை 15.12.2006 வெள்ளிக்கிழமை அன்று கொழும் பிலுள்ள SLAAS (Sri Lanka Association for the Advancement of Science) இல் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொள்ளச் சென்ற சமயம் அவருக்கு கிடைக்கப் பெற்ற அநாமதேய தொலைபேசி அழைப்பை அடுத்து மண்டபத்தை விட்டு வெளியே வந்தவர், இனம் தெரியாதவர்களால் கடத்திச் செல லப்பட்டார். அவர் பற்றிய எந்த தகவல்களும் இன்று வரை கிடைக்க வில்லை எனக் கூறப்படுகிறது.

எனது பல்கலைக்கழக காலம் தொட்டு கடைசி வரை என்னுடன் நட்புறவை பேணிவந்த நண்பர் குழாமில் முக்கியமானதொருவர் தான் இந்த ரவீந்திரநாத். விவசாய விஞ்ஞானபட்டதாரியான அவர் கலாநிதி பட்டம் பெற்று 1976இல் மட்டக்களப்பு கரடியனாறு விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் ஆராய்ச்சியாளராக (Research officer) சேர்ந்து, அங்கே இவரது ஆராய்ச்சியின் பயனாக சிறந்த மிளகாய் இனம் கண்டுபிடிக்கப் பட்டது என்பது பெருமைக்குரிய விடயமாகும்.

பேராசிரியர்ரவீந்திரநாத் 1980 ஆண்டு கிழக்கு பல்கலைக்கழகக் கல்லுரியில் சேர்ந்து தனது முயற்சி யால் கிழக்குப் பல்கலைக்கழகமாக உருவெடுக்க பல வழிகளில் பாடு பட்டு உழைத்தவர். இக்காலப் பகுதியில் நாட்டின் நிலமைகாரண மாக இவரை பல நண்பர்கள் வெளிநாடுகளில் உயர்பதவி மிகக் கூடிய சம்பளம் பெறக்கூடிய தொழில் வாய்ப்பு உள்ளது என அழைத்த போதும் அதனை அதனை உதறி, தமிழ் மக்களுக்காக, தமிழ் மண்ணிற்காக உழைத்தவர், நேசித்தவர். இவரது அயராத உழைப் பால் சகல இன மக்களின் விருப் பத்துடனும், அரசியல் தலைமை களின் ஆசீர்வாதத்துடனும் கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தராக தொரிவுசெய்யப்பட்டார்.

பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரவீந்திரநாத் 22.02.1951இல் கொக்கு வில் கிழக்கில் 5 பெண் சகோ தரர்களுக்கு மூத்த தமையனாக இருந்தார். இவர்தனது இடை நிலை கல்வியினை யாழ் இந்துக் கல்லுரியில் கற்று பின்னர் கொழும்பில் உள்ள அக்குனைஸ் கல்லுரியில் இருந்து 1973 ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக் கழகத்துக்கு விவசாய விஞ்ஞான பட்டப்படிப்பிற்கு தொரிவு செய்யப்பட்டார்.

இவர்மத ஈடுபாடு கொண் டவர். வெள்ளிக்கழமைகளில் காலை குறிஞ்சிக் குமரனுக் கும், மாலையில் கண்டி 'கட்டுக்கலை' விநாயகர் ஆலயத் திற்கும் செல்வதனை தனது கடமையாக கொண்டவர். எந்த சந்தர்ப்பத்திலாவது பல்கலைக்கழக காலப்பகுதியில் சரி அன்றி தனது பிற்கால வாழ்க்கையிலாவது புகைத் தலையோ, மதுவையோ தொட்ட தில்லை. தழிழாராய்சி மகாநாடு யாழ்ப்பாணத்தில் நடந்த போது அதைப்பார்க்க தனியாக யாழ்ப்பாணம் சென்று அங்கு நடந்த அவல நிலைகளை சொல்லி கவலைப்பட்டவர். தழிழ் இன உணர்வு மிக்கவர்.

இவ்விதமான ஓர் பேரறிஞ்சரை கடத்திச்சென்று கொல்வதற்கான பின்னணினியினை நோக்கும் போது, தழிழ் ஈழ விடுதலைப் புலிகள் (LTTE) அமைப்பிலிருந்து கருணா, பிள்ளையான் தலைமை கிழக்கினை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த காலப்பகுதியில் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த போரா சிரியர்சிவசுப்பிரமணியம் ரவீந்திர நாத் அவர்கள் உபவேந்தராக இருப்பதை பிராந்திய ரிதியில் அரசியல் நடத்தும் தலைமை விரும் பாத காரணத்தால் உபவேந்தர் அவர்களை பதவியில் இருந்து இராஜினமா செய்யும் படி கேட்டுக் கொண்டார்கள்.

இதனை வலியுறுத்தும் நோக்கில் 30.09.2006 ஆம் ஆண்டு கிழக்கு பல்கலைக்கழகத்தில் விரிவுரையாள ராக இருந்த பாலசுகுமார் என்பவரை ஆயுதக்குழு ஒன்று கடத்திச்சென்று போராசிரி யர் ரவீந்திரநாத் அவர்கள் தமது உபவேந்தர்பதவியை இராஜினமா செய்தால் மட்டுமே பாலகுமாரை விடுவிப்பதாக முன் நிபந்தனை விதித்தார்கள்.

பேராசிரியர் அவர்கள் தமது பதவியினை துச்சமென மதித்து உடனடியாக இராஜினமா கடிதத்தை பல்கலைக்கழக மானியக் குழுவிற்கு அனுப்பி வைத்தமை யால் விரிவுரையாளர் விடுவிக் கப்பட்டார்.

ஆனால் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு இவரது தகமை, திறமை பற்றித் தெரிந்தமையால் அவர்பதவி விலகுவதை விரும்ப வில்லை. ஆனமையால் பேராசி ரியர் ரவீந்திரநாத் தொடர்ந்து உபவேந்தராக கடமை வகிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஆனால் அவருக்கு பதவி விலகும் படி பலவழிகளில் நிர்ப்பந்தங்களும் உயிர் அச்சுறுத்தல்களும் ஏற்பட் டன.

இவரது குடும்பத்தினர், உறவி




னர்கள், நண்பர்கள் பராசி ரியரது உயிர் ஆபத்தை கருத்தற் கொண்டு உபவேந்தர் பதவியை விட்டு விலகி வெளிநாடு செல்லும் படி மன்றாட்டமாக கேட்டுக் கொணடார்கள் இதற்கமைய போராசிரியர்தன் நிலைமையை பல்கலைக்கழக மானியக்குழு தலை வருக்கு எடுத்துரைத்தபோது பேராசிரியரது உபவேந்தர்நியமனம் மேன்மை தங்கிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவால் வழங்கபபட்டமை யால் பதவி விலக ஜனாதிபதியின் அங்கிகாரம் தேவை என்று குறிப் பிடப்பட்டதுடன் கிழக்கு மாகாண பல்கலைக்கழகத்திற்கு செல்லாமல் கொழும்பில் இருந்து கொண்டே உபவேந்தராக செயற்படும் படியாக வேண்டப்பட்டார்.

இதற்கமைய இவரது மனைவி பெண் பிள்ளைகள் மருமகன் என்பவர்களுடன் தெகிவளை யிலுள்ள வீடொன்றில் வசித்து வந்தார். இவரது மருமகன் இலங்கையில் புகழ்பெற்ற கண் சிகிச்சை நிபுணர்டாக்டர்மலரவன் ஆவார். டாக்டர்மலரவனின் மருத்துவ சேவைக்கு இலங்கை அரசால் "தேசமானிய" என்ற விருது வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்தெகிவளையில் வசித்த போது, மிக பாதுகாப்பு வலயத்தில் அமைந்த (SLAAS) மண்டபத்தில் நடைபெற்ற வருடாந்த செயல மர்வுக்குச் சென்ற போது தான் கடத்தல் சம்பவம் நடைபெற்றது.

போராசிரியர்ரவீந்திரநாத்தை விடுவிக்கும் படி பலதரப்பட்ட வர்கள் பலவழிகளில் முயற்சித்தனர். அதில் நானும் எனது பங்கிற்கு யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்த பத்திரிகைகளில் திறந்த மடல் ஒன்றையும் விட்டிருந்தேன்.

கடத்தப்பட்ட 5 நாட்களில் (20.12.2015 புதன்கிழமை), பேராசிரி



கோத்தபாய ராஜபக்ச கருணா



மகிந்த ராஜபக்ச பிள்ளையான்

யரது மருமகன் டாக்டர்மலரவன் உட்பட அவரது குடும்ப உறுப்பினர்கள் மேன்மை தங்கிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை சந்தித்துபேராசிரியரதுஇராஜினமா கடிதத்தின் பிரதியை கொடுத்து பேராசிரியரை விடுவிக்க ஆவண செய்யும் படி மண்றாட்டமாக கேட்டனர். அப்போதைய பாதுகாப்பு செயலாளராக இருந்த கோத்தபாய ராஜபக்சவிற்கும் பல்கலைக்கழக மானியக்குழு தலைவர்உட்பட பல தரப்பினரும் போராசிரியரை விடுவிப்பதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கும் படி கேட்டுக்கொணடார்கள்.

சர்வதேச மன்னிப்புச்சபை கூட போராசிரியர் ரவீந்திரநாத் அவர்களை விடுதலையை வலியுறுத்தி இலங்கை அரசாங்கத்தை கேட்டுக்கொண்டது. கிழக்கு மாகாண பல இன மக்கள், அரச அரசசார்பற்ற நிறுவனங்கள், கிழக்கு பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் சகல தரப்பு ஊழியர்கள் பல தரப்பட்ட பேராட்டங்களை நடத்தியும் பேராசிரியாரை விடுவிக்க முடியவில்லை. கடத்தல் நடைபெற்ற 4 நாட்களில் Oxford, London, Paris போன்ற ஐரோப்பிய நகரங்களிலுள்ள உயர் கல்வி நிறுவனத்திற்குரிய 67 பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், திரு.ரவிந்திரநாத்

**உபவேந்தர்பதவியை இராஜினமா செய்தால் பாலகுமாரை விடுவிப்பதாக முன் நிபந்தனை விதித்தார்கள். பேராசிரியர் அவர்கள் தமது பதவியினை துச்சமென மதித்து இராஜினமா கடிதத்தை அனுப்பி வைத்தமையால் விரிவுரையாளர் விடுவிக்கப்பட்டார்.**

அவர்களின் விடுதலைக்காக வேண்டுகோள் விடுத்தனர். சகல விடுதலைக்கான முயற்சிகளும் “விழலுக்கிறைத்த நீர்” போலாகின.


பேராசிரியர் காணாமல் போய் 15.12.2015 அன்றோடு 9 வருடங்கள் கடக்கின்றன. கடந்த 9 வருடங்களாக பலதரப்பட்ட வதந்திகள், செய்திகள் பல வழிகளிலும் வெளியான போதிலும் எவ்விதமான உண்மையான தகவல்கள் கிடைக்கப்பெறவில்லை. 2015 இல் உருவான தற்போதைய நல்லிணக்க, தேசிய அரசு முன்னைய அரசாங்கத்தால் நடைபெற்ற ஊழல், மோசடி, கொலைகள் பற்றி மீள விசாரணை நடத்தி திடுக்கிடும் தகவல்கள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. தற்சமயம் எவ்வித தடுப்பு முகாம்கள் இல்லை என்று தற்போதைய அரசால் அறிவிக்கப்பட்ட நிலையில் பேராசிரியர்ரவீந்திரநாத் தற்சமயம் உயிருடன் இருப்பதற்கான வாய்ப்பு இல்லை என ஊகிக்கவேண்டியுள்ளது.

இவ்விதம் அவர்கொல்லப்பட்டிருந்தால் இதற்கான சூத்திரதாரிகள் யாவர்என அறிய அவரது குடும்பத்தவர்கள், நண்பர்கள், புத்திஜீவிகள், கல்விமான்கள் ஆவலாக உள்ளனர். அவரது கொலைக்கான காரணத்தை அரச இயந்திரத்தைக் கொண்டு அறியப்பட வேண்டும். இதற்காக அரசுடன் இணக்கமான உறவைக் கொண்ட தழிழ் அரசியல் தலைமைகள் முன்வரவேண்டும்.



சர்வதேச ஊழல் எதிர்ப்புதினத்தை முன்னிட்டு கடந்த 9ம் திகதி நாடு முழுவதிலுமுள்ள அரசநிறுவனங்களில் ஊழலுக்கு எதிரான உறுதிமொழி எடுத்துக் கொள்ளப்பட்டது. மட்டக்களப்பின் மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேசசெயலகத்தின் உத்தியோகத்தர்கள் உறுதிமொழி எடுத்த படங்கள்.

# வள்ளுவனின் வாய்மை



மாயாமகேஸ்
mayamahes90@gmail.com

இன்றைய காலத்தில் விலை மதிப்பில்லாது அருகி வருவது எது எனக் கேட்டால் அது வாய்மை தான். ஒரு தாய் தன் குழந்தையிடம் கேட்கிறாள், “ஏம்மா சீனி சாப்பிட்டியா?” என்று. சீனி உண்ட வாயைத் திறக்க முடியாமல் குழந்தை இல்லை என்று தலை ஆட்டுகிறது. சில சமயங்களில் குட்டிக் குழந்தை முதல் பெரியவர்கள் வரை வாய்மைக்கு தூரமாகிவிடுகின்றனர். ஏன்? ஏதோ ஒன்றை மறைப்பதற்காக உண்மை வெளிவர மறுக்கிறது. அதாவது பொய் உரைக்க நேரிடுகிறது. இது நன்மையிலும் முடியலாம் தீமையிலும் முடியலாம்.

வள்ளுவர் சொன்னார், “வாய்மை எனப்படுவது யாதெனில் யாதொன்றும் தீமை இலாத சொலல்”.

ஒரு கொலைகாரன், பாதகன் ஒரு பெண்ணைத் துரத்தி வருகிறான். அவள் மறைந்திருக்கிறாள். அவள் எங்கே எனக் கேட்கும் போது இங்கு வரவில்லை எனச் சொல்லலாம். அதுவே அநியாயத்திற்கு உயிர் கொல்லும் தீவிரவாதிக்கு புகலிடம் அளிப்பதோ நன்மை பயக்காது. சில சமயங்களில் நன்மை தருவதாக தோன்றினாலும் விளைவு தீமையே ஆகும்.

இப்போதெல்லாம் பொய்யாரும் உரைப்பதில்லை. அதுகூட புனை பெயரில் வெளிவருகிறது. வியாபார தந்திரம், உத்தி, நாகாறிகம் எனப் பல வடிவம் கண்டுள்ளது. வாயால் உரைப்பதெல்லாம் வாய்மை ஆகிவிட்டது. வியாபாரி ஒருவன் ஒரு பொருளிற்கான விற்பனை விலையை பத்து வீதமோ இருபது வீதமோ அதிகமாகச் சொல்வான். பேரம் பேசி இறுதியில் விற்பனை விலையை விட அதிகமான விலைக்கு விற்றுவிடுவான். அதை வியாபார தந்திரம் என்பான். ஏதிரியை முகஸ்துதி செய்வான். வீண் வம்பு எதற்கென்பான். பொய்யிற்கு பாராட்டுவான். பெரிய இடம் ஏதேனும் பிரயோசனப் படும் என்பான். எதிர்காலத்திற்காய் நிகழ்காலத்தை விலை பேசுகிறான் மனிதன்.

தற்காலத்தில் தன்மீதுள்ள நம்பிக்கையை விட தொழில்நுட்பத்தின் மீது நம்பிக்கை உயர்ந்துள்ளது. சிலவேளைகளில் கருத்தை எந்தவித வடிகட்டலும் இன்றி வெளியிடுவதற்கு முன் பலவற்றைச் சிந்திக்க வேண்டியிருக்கிறது. அதையும் கடந்து வெளிவிட்டால் விளைவுகள் விசமாகி இது போல பலரது வாயையும் அடைத்துவிடுகிறது. வாய்மை இப்போதெல்லாம் வழிவிட்டு ஒதுங்கிப்போகிறது. ஒரு பிரச்சினையை நேருக்கு நேர் நின்று முகம் கொடுக்க துணிவு இல்லை. அது குள்ளநரித்தனத்துடனும் பழிவாங்குதலுடனும் தொடர்கிறது இல்லையெனில் இறைவன் மீது போட்டுவிட்டு பலனுக்காய் பார்த்திருக்கின்றது.

சரி இந்த உண்மைகள் என்னாகின்றன?

பொய்யிற்கு ஆதாரம் கிடையாது. உண்மை ஆதாரத்தை அடிப்படையாகக்கொண்டது. அவை ஒரு போதும் உறங்குவதில்லை. சமயம் பார்த்து வெளி வரக்காத்திருக்கும். வாய்மை சொல்வது சிலசமயம் சிலருக்கு பாதகமாக இருக்கலாம். நாம் சொல்லும் வாய்மையால் முடிந்தவரையில் யாருக்கும் தீங்கில்லாதவாறு பார்த்துக்கொள்ளவேண்டும்.



## ஊர் சுற்றும் ஸ்ருதி

சிங்கம் 3 படப்பிடிப்புக்கள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. சிங்கம் 2 இல் நடித்த அதே ஜோடிதான். சூர்யாவின் மனைவியாக அனுஷ்கா நடிக்கிறார். ஹன்சிகாவிற்கு பதிலாக ஸ்ருதிஹாசன் நடிக்கிறார். சிங்கம் 2 இல் ஹன்சிகா சும்மா வந்து போனார். ஆனால் இதில் ஸ்ருதிக்கு அழுத்தமான பாத்திரமாம். எதிரிகளை வேட்டையாட நாடுநாடாக பறக்கும் சூர்யாவுடன் கூடவே பயணிக்கும் சிஐடி பெண் பாத்திரமாம் ஸ்ருதிக்கு.

## ஜீவா ஜோடி லட்சுமிமேனன்

'யான்' படத்துக்கு பிறகு ஜீவாவுக்கு தொடர்ந்து படங்கள் அமையவில்லை. தற்போது நயன்தாராவுடன் 'திருநாள்' என்ற படத்தில் நடித்து வருகிறார். அடுத்து 'போக்கிரி ராஜா' படத்தில் இவரது ஜோடியாக ஹன்சிகா நடிக்கிறார். 'கவலை வேண்டாம்' படத்தில் ஜீவா ஜோடியாக கீர்த்தி சுரேஷ் நடித்து வருகிறார். இதன் படப்பிடிப்புகள் முடிவடையும் நிலையில் உள்ளது. இந்த படங்கள் விரைவில் ரிலீஸ் ஆக இருக்கின்றன. இந்த நிலையில் அறிமுக இயக்குனர் முத்துக்குமார் இயக்கத்தில் 'ஜெமினி கணேசன்' என்ற படம் தயாராகிறது. இதிலும் ஜீவா நடிக்கிறார். இந்த படத்தில் இவரது ஜோடியாக லட்சுமி மேனன் நடிக்கிறார்.

## சந்தியாவின் முன்னுதாரணம்!

குருவாயூர் கோவிலில் 'காதல்' சந்தியாவின் திடீர் திருமணம் நடந்தது. வெகு சிலர்தான் கலந்து கொண்டனர். ஓடிப்போய் தாலி கட்டுபவர்கள் போல எதற்கு இப்படி கல்யாணம் செய்கிறார்கள் என விசாரித்து பார்த்தால், சந்தியாவின் திருமணம் சென்னையில் தடல்புடலாக நடக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததும், வெள்ளம் அனைத்தையும் குழப்பிவிட்டதும் தெரிந்தது. நிச்சயிக்கப்பட்ட திருமணத்தை பின்தள்ள விருப்பமில்லாமல், குருவாயூர் கோவிலில் தாலி காட்டியுள்ளனர். சென்னையில் பிரமாண்டமாக திட்டமிட்ட திருமணத்திற்கு ஆகும் செலவை வெள்ளநிவாரண நிதிக்கும் கொடுத்துள்ளார்.

## கலந்து கட்டும் நடிகை!

நஸ்ரியா அறிமுகமானது 'நேரம்' படம்மூலம். முதல்படமே ஹிட் அடிக்க, அடுத்தடுத்த வாய்ப்புக்களை பற்றி மேலேறிவிட்டார். உச்சத்திலிருந்துபோதே திடீரென கல்யாணமும் செய்து, குடும்ப குத்துவிளக்காகிவிட்டார். 'நேரம்' படம் வெளியாகி இரண்டு வருடங்களாகிவிட்டது. தற்போது தெலுங்கில் ரீமேக் ஆகிறது. நாயகன் சுதீப் ஹிஷன். நாயகி அனிஷா அம்புரோஸ். படப்பிடிப்பிற்கு முன்னர் அம்மணி மிகவும் பயிற்சி செய்கிறாராம். குறிப்பாக 'நேரம்' படத்தை அடிக்கடி பார்த்து நஸ்ரியாவின் நடிப்பை உன்னிப்பாக கவனிக்கிறாராம். நஸ்ரியாவின் நடிப்புடன் தனது ஸ்டைலையும் கலந்துகட்டி திறமை காண்பிக்கப் போகிறாராம்.



ரீங் டாக்கீஸ்



## ரவுண்டு கட்டும் ராதிகா

இத்தனை நாளாக இந்தப்பெண் எங்கிருந்தது என திரையுலகத்தை அலற வைத்துள்ளார் ராதிகா ஆப்தே. ஏற்கனவே அகல்யா என்ற குறும்படத்தின் மூலம் நெட்டிசன்களை கலங்கடித்த ராதிகாவின் புது அவதாரம் 'Bold is Beautiful' என்ற குறும்படம். இதில் கர்ப்பிணியாக நடிக்கிறார். பணியிடத்தில் கர்ப்பிணிகளிற்கு ஏற்படும் பாலின பாகுபாட்டை தோலுரிக்கும் படம். தற்போது யூடியூப்பில் 9 இலட்சத்திற்கும் அதிக பார்வையாளர்களை கடந்து வைரலாக பரவி வருகிறது. அடுத்தடுத்து ஹிட் அடித்து வருவதில் ராதிகா மிக உற்சாகமாக இருக்கிறார்.

## ரஜினியின் வேண்டுகோள்

டிசம்பர் 12ம் திகதி ரஜினிகாந்தின் 65வது பிறந்தநாள். வழக்கமாக ரஜினி பிறந்தநாள் என்றால் ரசிகர்கள் அமர்க்களப்படுத்தி விடுவார்கள். இம்முறை ரஜினி முன்கூட்டியே ஒரு தகவல் அனுப்பியுள்ளார். தனது பிறந்தநாளை ரசிகர்கள் கொண்டாடாமல் தவிர்த்துவிடுமாறு கேட்டுள்ளார். சென்னை வெள்ள அழிவுகளால் பொதுமக்கள் பெரும் சிரமத்தை சந்தித்து வருகிறார்கள். இந்தநிலையில் பிறந்தநாளை கொண்டாடுவது நல்லதல்ல என்றும், டிசம்பர் 12ம் திகதியன்று வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட மக்களிற்கு உதவி செய்யுங்கய் என கேட்டுள்ளார்.



## சமந்தாவின் அந்த மூன்று நாட்கள்!

சென்னையை வெள்ளம் புரட்டிப் போட்டுக்கொண்டிருந்த சமயத்தில் சமந்தா வெளியூரில் படப்பிடிப்பில் இருந்துள்ளார். வெள்ளத்தில் சமந்தாவின் பெற்றோர் மற்றும் நண்பர்கள் சிக்கியுள்ளனர். அவர்களுடன் 3 நாள் எந்த தொடர்பும் இல்லாமல் போயுள்ளது. இதுபற்றி சமந்தா கூறும்போது, '3 நாளாக என்னால் தூங்கக்கூட முடியவில்லை. மிகவும் தவித்து போனேன். பின்னர் அவர்களின் தொடர்பு கிடைத்த பின்னர்தான் தூங்க முடிந்தது. சென்னை வெள்ளத்தில் பெருமளவானவர்கள் பாதிக்கப்பட்டது தாங்க முடியாத சோகத்தை ஏற்படுத்தியது' என்றார்.



# வைத்தியரிடம் கேளுங்கள்

**ஆயுர்வேத சிகிச்சையில் அதிகம் பாவிக்கப்படும் அதிமதுரம் சளி இருமலுக்கு சிறந்ததென்கிறார்கள். இதன் பயன்களை விளக்குவீர்களா? இதை எப்படி நாங்கள் பாவிக்கலாம்.?**



வைத்தியர் கந்தையா சோதிதாசன்
drsothithas@gmail.com
0776284687

**தணிகாசலம் (52)**
**கொக்குவில்**

**கேள்வி:** ஆயுர்வேத சிகிச்சையில் அதிகம் பாவிக்கப்படும் அதிமதுரம் சளி இருமலுக்கு சிறந்ததென் கிறார்கள். இதன் பயன்களை விளக்குவீர்களா? இதை எப்படி நாங்கள் பாவிக்கலாம்.?

**பதில்:** ஆமாம். சித்தாயுர்வேத மருத்துவத்தில் மிக அதிகமாகப் பயன்படுத்தப்படும் முக்கியமான மூலிகை அதிமதுரம். இனிக்கும் இந்தவேர் பல்வேறு நோய்களை நீக்கும்.

உடல்வெப்பத்தைத் தணித்து வாய்ப்புண், நாவறண்டு போதல், காமாலை, வறட்டு இருமல், வயிற்றுப்புண் சிறுநீர் எரிச்சல், உளவியல் நோய்கள் முதலான உஷ்ணம் காரணமாக (பித்தம் காரணமாக) வரும் அனைத்து நோய்களுக்குமே அதிமதுரம் பயன் படுகிறது.

கைக்குழந்தைகளுக்கு தாய்ப் பாலில் இழைத்துக் கொடுக்கப்படும் உரைமருந்தில் அதிமதுரம் சேர்க்கப் படுகிறது. அதிமதுரத்தை அரைத்து, குச்சிபோல் காயவைத்து, தாய்ப் பாலில் இழைத்துக் கொடுப்பார்கள்.

வறட்டு இருமலுக்கு அதிமதுரம் மிகச்சிறந்த மருந்து. அதிமதுரக் கட்டையில் சிறுதுண்டைவாயில் அடக்கிக் கொண்டு உமிழ்நீரை விழுங்கிவந்தாலே வறட்டு இருமல் நீங்கும். கொஞ்சம் நாள்பட்ட இருமல் இருப்போருக்கு, அதிமதுரம், கடுக்காய், மிளகு இந்த மூன்றையும் சமஅளவில் எடுத்து வறுத்துப் பொடித்துவைத்துக்கொண்டு இந்த பொடி மூன்று சிட்டிகையை (சிட்டிகை முன்று விரலால் கிள்ளி எடுப்பது) தேன் அல்லது பனங் கற்கண்டுடன் கலந்து கொடுக்க வறட்டு இருமல் மாறும். அதிமதுரப் பாணி வயிற்று புண்ணை குணமாக்குகிறது.

அதிமதுரமும் பெருஞ்சீரகம், வெல்லமும் சமஅளவு எடுத்துப் பொடித்து அரைதேக்கரண்டி அளவு சாப்பிடலாம். அல்லது இந்தத்தூளை தேநீர் போடுவது போல் கசாயமாக்கியும் அருந்தலாம். தலைவலிக்கு இது குணமளிக்கிறது.

**அமிர்தநாதன் (26)**
**வேலணை**

**கேள்வி:** ஒற்றைத் தலைவலியால் நீண்ட காலம் அவதியுறுகிறேன். ஆயுர்வேத சிகிச்சையில் தீர்க்க வழியுண்டா?

**பதில்:** சித்தமருத்துவப்புரிதல்படி மைக்ரேன் எனும் ஒற்றைத்தலைவலி வருவது அதிக பித்தத்தால்தான். பலருக்கும் வெயிலில் அலைச்சல், இரைச்சலான இடத்தில் இருத்தல், அதிக வெட்கை சனக் கூட்டம் நிறைந்த இடத்தில் வசித்தல், தூக்கமின்மை, கால நேரம் தவறி உணவு அருந்துதல், அஜீரண கோளாறு, தேவையற்ற சிந்தனை, மன உளைச்சல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் ஒற்றை தலைவலி வருகிறது. குடும்ப பாரம் பரியமாகவும் சிலருக்கு இந்நோய் வருகிறது. பெண்களுக்கு மாதவிடா யினை ஒட்டி இது வரலாம்.

நொச்சித்தழையை வெந்நீரில் போட்டு ஆவி பிடித்தாலே ஒற்றை தலைவலிக்கு தீர்வு காணலாம்.

ஆறுமுக செந்தூரம், கவுரி சிந்தாமணி செந்தூரம் ஆகிய மருந்துகளை சுக்கு , மிளகு, திப்பிலி சேரக்கூடிய திரிகடுகுசூரணத்துடன் சேர்த்து உட்கொண்டால் ஒற்றை தலைவலிக்கு உடனடி தீர்வு கிடைக்கும்.

**பவுஸ்ரினா (22)**
**பாசையூர்**

**கேள்வி:** அண்மைக்காலமாக தலைமுடி அதிகம் உதிர்கிறது. என்ன செய்யலாம்?

**பதில்:** ஊட்டச்சத்து குறைபாடு, சுகாதாரம் இன்மை, இரும்புச் சத்து குறைவால் ஏற்படும்இரத்தசோகை, பொடுகு போன்றவற்றால் முடி உதிர்கிறது. மன அழுத்தம் அதிகம் உள்ளவர்களுக்கும் முடி உதிரும்.

இரத்த சோகை காரணமாக முடி உதிர்கிறது எனத் தெரிந்தால் அத்திப் பழம், பேரீச்சைப் பழம், இரும்புச் சத்து மருந்துகள், கரிசாலைக் கற்பக மாத்திரை இவற்றை உட்கொள்வதன் மூலம் முடி உதிர்வைத் தடுக்கலாம்.

ஆயுர்வேதத்தில் முடிஉதிர்வை தடுத்து கூந்தலைபேணுகின்ற பல முலிகைகள் சொல்லப்படுகின்றன. மருதாணி, கருசலாங்கண்ணி பொன்னாங்காணி, கற்றாழை, வெந்தயம், கடுகு, கடுக்காய் நெல்லி என்பன குறிப்பிடத்தக்கன .

கூந்தலை கருமையாக்குவதில் மருதாணி சிறந்த மூலிகை. இது இளநரையை தடுக்கும். கூந்தலில் பொடுகு ஏற்படாமல் தடுக்கும். கூந்தலின் வேர்கால்களை வலுவாக்கி உதிர்வதை தடுக்கும்.

சோற்றுக்கற்றாழை சிறந்த மூலிகையாகும். கூந்தல், சருமம் போன்றவற்றினை பாதுகாக்க சிறந்த மூலிகையாகப் பயன்படுகிறது. சோற்றுக் கற்றாழையின் உள்ளிருக்கும் சோற்றை எடுத்து தலையில் தேய்த்து வர முடி உதிர்ந்து வழுக்கையானவர்களுக்கு புதிய முடி முளைக்க வாய்ப்புள்ளதாக மருத்துவர்கள் கூறுகின்றனர்.


கூந்தலின் வறட்சியை போக்கி மென்மையாக்குவதில் சோற்றுக் கற்றாழை முக்கிய பங்காற்றுகிறது.

மன அழுத்தம் காரணமாக முடி உதிர்கிறதென தெரிந்தால் அமுக்கரா அல்லது அஸ்வசுந்தா மருந்துகள் சித்த மருந்துக்கடைகளில் கிடைக் கும். இவற்றை உட்கொண்டால், மன அழுத்தம் குறையும். தியானம், யோகா செய்வதும் மன அழுத்தத் தைக் குறைக்கும். தலைமுடி உதிர்வையும் தடுக்கும்.

நீலி ஜாதித் தைலம், பொன்னாங் காணித்தைலம், பிருங்காமலத் தைலம் என்பன பயனளிக்கும். அவரவர் தெரிநிலைக்கேற்ப இதில் எதாவதொன்றை வைத்தியர் சிபார்சு செய்வார்.

**ந.நாகேஸ்வரன் (54)**
**சுன்னாகம்**

**கேள்வி:** திரிபலா சூரணம் அருந்தவது உடற் பருமனை குறைக்குமா?



**பதில்:** ஆயுர்வேத, இயற்கை மருத்துவ முறைகளில் அமிர்தமாகக் கொண்டாடப்படுவது திரிபலா சூரணம். கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் எனும் மூன்று பொருட் களின் கூட்டமைப்பு. இது மருந்துக்கடைகளில் எளிதாகக் கிடைக்கும்.

திரிபலாசூரணம் தினமும் சாப்பிட்டு வர வளர்ச்சி மாற்றம் சீராகஇருக்கும். அஜீரணக்கோளாறு நீங்கும். இரத்தம் சுத்திகரிக்கப்படும். இரத்த ஓட்டம்சீராகும். இதனால் உயர்த்தஅழுத்தம், கொலஸ்ட்ரோல், உடல்எடையைக் குறைக்க விரும்பு பவர்களுக்கு இது சிபார்சு செய்யப்படுகின்றது.

இதுமட்டுமன்றி பலநோய்களுக்கு திரிபலா நிவாரணமளிக்கிறது. ஆஸ்துமா, மஞ்சள்காமாலை இருப்பவர்களுக்கு ஏற்றது.

தோலில் அரிப்பு, கருமை, சிவப்புப்புள்ளிகள் இருந்தால் இந்த சூரணத்தைத்தடவி வர விரைவில் சரியாகும். தொடர்ந்து திரிபலா சாப்பிட்டு வருபவர் களுக்கு, தோல் மினுமினுப்பு அடையும். உடல் வலுவாகும், நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கிறது. காலில் வெடிப்பு இருந்தால், இரவு படுக்கைக்குப் போகும் முன்பு, சுடுநீரில் திரிபலா சூரணத்தைக் கலந்து, வெதுவெதுப்பான சூட்டில் பாதத்தை 20 நிமிடங்கள் ஊறவைத்து எடுக்கலாம்.

**எஸ் சிவஞானம் ( 48)**
**நவாலி**

**கேள்வி:** எனக்கு கடந்த ஒருவருட மாக மூலநோய் ஏற்பட்டுள்ளது. மலத்துடன் இரத்தம் வெளியேறு கிறது.சிலவேளைகளில்மூலகடுப்பும் தொந்தரவு தருகிறது. மருத்துவ ஆலோசனை தருவீர்களா?

**பதில்:** மலக்குடலின் அடிப்பகுதி யில் ஏற்படும் இரத்த நாளவீக்கமே மூலநோய் எனப்படுகிறது. இரண்டு வகையாகப் பிரிக்கப்படுகிறது.

**1 உள்மூலம்**

உள்மூலம் என்பது ஆசனவாயின் உட்பகுதியில் ஏற்படும் இரத்த நாள வீக்கமாகும்.


**2 வெளிமூலம்**

வெளிமூலம் என்பது ஆசனவாயின் வெளிப்பகுதியில் ஏற்படும் வீக்கமாகும்.

வெளிமூலத்தை விரல்களால் தொட்டு உணரமுடியும். உள்மூலத்தை அறிகுறிகள் மூலமா கவும், மருத்துவரின் உதவியுடன் மட்டுமே கண்டுபிடிக்க முடியும்.

மலக்குடலில் ஏற்படும் அதிக அழுத்தமே மூலத்திற்கு முக்கிய காரணமாகக் கூறப்படுகிறது.

- நாட்பட்ட மலச்சிக்கல்
- நீண்டநேரம் ஒரே இடத்தில் அமர்ந்து வேலைசெய்தல்
- மலம் கழிக்க முக்குதல்





- நீண்டநாள் வயிற்றுப் போக்கு
- ஆசனவாயில் ஏற்படும் நோய்த் தொற்றுகள்
- அதிககாரம், அசைவம் மற்றும், மசாலா கலந்த உணவுகளை அதிகம் அடிக்கடி உட்கொள்ளுதல் என்பன மூலவருத்தத்திற்கு காரணமாகின்றன.

கருவுற்ற பெண்களுக்கும், குழந்தை பெற்ற பெண்களுக்கும், உடல்எடை அதிகரித்தாலும் மூலநோய் வரலாம்.

**அறிகுறிகள்**

வலியுடன் மலம்கழித்தல், மலத்துடன் இரத்தம் சேர்ந்து வருதல்,மலம்கழிக்கும் போதும் கழித்த பிறகும் தாங்க முடியாத எரிச்சல் மற்றும் வலி.

ஆசனவாயில் அரிப்பு, பட்டாணி அளவிற்கோ அல்லது அதற்கு மேலோ மலக்குடல் வெளித்தள்ளுதல் என்பன இதன் அறிகுறிகள் ஆகும்.

அதிகப்படியான காரம், மசாலா, அசைவ உணவுவகைகளைத் தவிருங்கள். நிறைய தண்ணீர் குடிக்கவும். நார்ச்சத்து மிகுந்த உணவுப் பொருட்களை அதிகம் உட்கொள்ள வேண்டும். நீண்டநேரம் ஒரேஇடத்தில் அமர்வதை தவிருங்கள். பிரண்டை இஞ்சி துவையல் பயனளிக்கும்.கருணைக் கிழங்கு உணவில் சேர்த்துக் கொள்ளலாம். தாத்திரி சூரணம், கருணைக் கிழங்கு லேகியம் என்பனவும் நவீனமாக தயாரிக்கபடும் pilex என்ற ஆயுர்வேத மருந்தும் இதற்கு நிவாரணமளிக்கிறது .



**துரைசிங்கம் (42)**
**மானிப்பாய்**

**கேள்வி:** சமீப காலமாக மலச்சிக்கலால் அவதிப்படுகிறேன். தீர்வு சொல்வீர்களா?

**பதில்:** வழக்கத்துக்கு மாறாக மலம் வெளியேறாமல் இருப்பது. மலம் இறுகிப்போவது, மலம் கழிப்பதில் சிக்கல், மலம் முழுவதுமாகப் போகவில்லை என்கிற உணர்வு. மலம் கொஞ்சம்கூடப் போகாமல் ஆசனவாயை அடைத்துக்கொள்வது போன்ற நிலைமைகளை 'மலச்சிக்கல்' என்று அழைக்கிறோம்.

மருத்துவமொழியில்சொன்னால் ஒருவருக்கு வாரத்துக்கு மூன்று முறைக்குக் குறைவாக மலம் போவது 'மலச்சிக்கல்'.

- நார்ச்சத்துள்ள உணவுகளை சேர்த்துக்கொள்ளாமை
- குடற் செயற்பாடு குறைவடைதல் (இது வயதானவரிம் ஏற்பட கூடியது)
- சிலவகையான மருத்துப் பாவனை
- வாழ்கைச் சூழலில் ஏற்படும் திடீர் மாற்றம்
- நீண்ட தூர பிரயாணம்

போன்ற காரணங்களால் மலச்சிக்கல் ஏற்படுகிறது


இதனை எமது வாழ்க்கை முறை மாற்றங்கள் மூலம் சரி செய்யலாம். பதப்படுத்தப்பட்ட உணவுகளைத் தவிர்க்கவும். அதிக நார்ச்சத்துள்ள உணவுகள் மலத்தை இளக்கும். நீங்கள் அன்றாடம் உட்கொள்ளும் உணவினால் மலச்சிக்கல் ஏற்படுகிறதா எனக் கவனிக்கவும். நீர் வறட்சி மலச்சிக்கலை ஏற்படுத்தும். அதிக திரவ உணவுகள் வறட்சியைத் தடுப்பதற்கு உதவும். ஆனால் கோப்பி, ரீ மற்றும் மது போன்றவற்றைத் தவிர்க்கவும். தொடர் உடற்பயிற்சி குடல் சுறுசுறுப்பாக இயங்க உதவும். மலம் வரும்போது வேறு வேலையில் ஈடுபட்டிருந்தாலும் புறக்கணிக்காமல் செல்லவும்.

எப்போதும் தளர்வு நிலையில் இருப்பது உதவும். திரிபலா சூரணம், தாத்திரி சூரணம் என்பன மலச்சிக்கலைத்தீர்க்கும் மருந்துகளாகும். வைத்தியர் ஆலோசனையுடன் பாவிக்கவும்.

---

# காதல் சிலுவையில்: மூன்று

த.அகிலன்
t.agiilan@gmail.com



இதுவரை எழுதாத
சொற்கள் கொண்டவொரு
கவிதையை
எழுதும் என் பிரயத்தனங்களை
ஏளனம் பொங்கப்
பார்த்துக்கொண்டேயிருக்கிறாய் நீ
என்னுடைய
வார்த்தைகளையெல்லாம்
அடிமை செய்து
வைத்துக்கொண்டு...

கூரையில் நிரந்தரத் தாளமெனப் பொழிந்து கொண்டிருந்துவிட்டு சட்டென்று நின்று போன மழையைப்போலப் போய் விட்டாய். உதிர்ந்து கிடக்கிற கொண்டல் பூக்களை இணைத்துக் கோலங்கள் செய்தபடி காத்திருக்கிறேன். நீ வரும் திசைகளின் புகார்கள் விலகுவதாயில்லை. சில கவிதைகள் நினைவுக்குள் அலைந்தன. உன்னை நினைவூட்டும் பொருட்கள் இத்தனை தானென்ற என் வரையறைகள் சிதறிய இக்கணத்தில் நான் உணர்ந்து கொண்டேன்.இங்கேஎல்லாமேஉன் நினைவுகளால் ஆனதென்றும். நான் உன்னால் ஆனவனென்பதையும்...

மழை ஓடிய வழித்தடங்களில் திசையற்றுக் கரைந்து போயிருந்தது உன் கால்தடங்கள். மனசுக்குள் மிதக்கிற உன் ஒற்றை ஓவியத்தில் உறைந்து போய்க்கிடக்கிறது மழையும் எனக்கழித்த பழைய புன்னகை ஒன்றும்.

அவநம்பிக்கைகளால் செய்யப் பட்டிருந்த எனது நாட்களையும் வார்த்தைகளையும் தத்தெடுத்துக் கொண்ட உன் புன்னகை ஒரு வானவில்லைப் போலத் திடீரென்று மறைந்தது. நீ கொடுத்த நம்பிக்கையின் குற்றுயிரில் நான் மறுபடியும் ஒரு வானவில்லைச் செய்வதற்கான வர்ணங்களைச் சேகரிக்கலானேன். வானவில்லை உன்னைப்போல தேவதைகள் மட்டுமே செய்ய முடியும்.என்னைப்போலசாதாரணனுக்கு உன் பிரியமே வாய்க்காத போது எங்கனம் வானவில் செய்தல் வாய்க்கும்...

உனது உயரங்களை எட்டமுடியா என் நினைவுகள் நெருக்க, உன் புன்னகையில் தூரிகையைத் தொட்டுக் கொண்டு ஒரு ஓவியத்தை வரையத் தொடங்கினேன். நீ அவ் ஓவியத்தின் மீது நீரள்ளி ஊற்றுகிறாய். கரைந்தென் காலடியில் ஒழுகும் வண்ணங்களில் எது என் கண்ணீர். பிரித்தறிய முடியாத படிக்கு பெருகிஓடுகிறது வண்ணங்கள்..துயரத்தின் வண்ணங்களாகின அவை..

ஒரு மதுக்கோப்பையின் வண்ணங்கள் கொண்டதா காதல்... ஒளியில் மினுங்கும் இந்தத் திராவகத்தினுள் உறைந்திருக்கிறது உன் பிரியம்... நான் ஆசையோடு பருகத்தொடங்குகிறேன்... அது உன் பிரியப்போலியெனத் திடுக்கிடும் மனம் வீரிட்டலறுகிறது... இத்தனிமையைச் சபித்தபடி... மதுவாலும் உன்னை வெல்லமுடியாதொரு கணத்தில்... மது தோல்வியுற்ற ஒரு மனிதனின் குற்றவுணர்வுகளோடு நீங்கிப்போயிற்று... உனது இருப்பிடங்களைக் காலிசெய்ய முடியாமல்... உனது நினைவுகளை உக்கச்செய்யமுடியாமல்... அவமானமும் வெட்கமும் மேலிட மது தோற்றுப்போய் வெளியேறியது... குடிப்பதில் எந்தப்பயனுமில்லை எனத் தெரிந்துகொண்ட ஒருநாளில் உபயோகித்த மதுக்கிண்ணங்களை நொருக்குவதில திருப்திகொள்கிறது மனம்... நொருங்கித் தெறிக்கும் கண்ணாடிச்சில்லுகளில் கிழிந்து தொங்குகிறதென் தனிமை... எனக் கண்ணாடிச்சில்லொன்றை எடுத்து எனக்குள் பதுங்கிக்கொண்டிருக்கும் உன்னைத் தோண்டி எடுத்து விடலாமென்றிருக்கிறேன்...

எப்படி உன்னை வெளியேற்றுவது? உனது நினைவுகளைப் பிரித்து வைக்கத் தொடங்கியபோதுதான் உணர்ந்தேன், நீயற்ற ஒரு நினைவு எனக்குள் இல்லை என்பதை.

கண்ணீர் ஒரு துரோகி. தனிமையில் துணைக்குக்கிளம்பி விடுகிறது. நான் தனித்திருக்க விரும்புகிறேன். நான் உனக்கும் நீ எனக்குமாய் அள்ளியிறைத்த வார்த்தைகள் சொரிந்து கிடக்கிறது எதிரில். பிரியமான நமது காதல் தீனமான குட்டி நாயின் பதுங்கலோடு பார்த்தபடியிருக்கிறது. நான் உன்னைக் கெஞ்சுகிறேன். அதைச் சாகவிட்டுவிடாதே என்று. நீ குரூரம் வழியச்சிரிக்கிறாய்.. இன்னமும் பதுங்கி ஒழித்துக் கொள்கிறது அது.

இப்போது நான் என்ன செய்வது? உனை வெளியேற்றும் வழிகள் அனைத்தும் தோற்க... நிர்க்கதியாய் நின்றேன் காலத்தின் எதிரில். வா உனது மயக்கும் புன்னகையில் எனது உணர்வுகளை மங்கச் செய்து எனது உடலைக்கீறிப்பிளந்துனது நினைவுகளை எடுத்துப்போ..

கோழிகூவித்தூங்கின நாட்கள்/ விளிம்புகள் மழுங்கிய உனது குரல்

• உனது பிரியத்தின் வாசனை
மடித்து வைக்கப்பட்டிருக்கும்
றங்குப்பெட்டியின்
உட்சுவரில் ஒட்டப்பட்டிருக்கும்
கத்தரிக்கப்பட்ட கவிதைகள்
யாருடையவை?

• ஒரு
உடைந்து போன நிலவும்
மீந்த ஒற்றைக்கொலுசும்
பூட்டி வைக்கப்பட்டிருக்கும்
பேழை
மனசு

• கோழிகள் கூவித்தூங்கின
எனது நாட்கள்.
நான்
உன் தடம் பற்றி நடக்கையில்.
அலையேந்திப் போயிருந்த
உன் காலடிகளைப்
பின் தொடர்ந்து
அலைகளுக்குள் நடந்து
கொண்டிருக்கிறது நிலவு

• முகமற்று
ஒளிரும்
உன் புனனகை மட்டுமாய்
அலைந்து கொண்டிருக்கிறது
எனது
தெருக்களில்.

• கவனமற்றுச்
சொற்களை
இறைத்தபடியிருக்கிறேன்
தாள்களில்.
விளிம்புகள் மழுங்கிய
அலைகளாய்
தவழும் உன் குரலால்

உன் புனனகை மட்டுமாய்
அலைந்து கொண்டிருக்கிறது
எனது
தெருக்களில்.

• கவனமற்றுச்
சொற்களை
இறைத்தபடியிருக்கிறேன்
தாள்களில்.
விளிம்புகள் மழுங்கிய
அலைகளாய்
தவழும் உன் குரலால்

# வாழ்க்கை முன்னேற்றத்திற்கு அதிஷ்ட விஞ்ஞானம் கூறும் எண் சோதிட பலாபலன்கள்



சோதிட ஆலோசகர்
சி.இராசநாயகம்
0776147392



நரம்பு பலவீனம், கால் கைகள் சோர்வடைதல், வாதம் ஏற்படுதல் மற்றும் மூளை சம்பந்தப்படும் நோய்களும் ஏற்படும். இதற்கு யோகாசனம் பிராணாயாமம் எண்ணெய் ஸ்னானம் இவற்றை நல்ல ஒழுங்கு முறையாக பின்பற்றி வந்தால் மிகவும் நல்லது. நோய்கள் குறைவடைந்து ஒய்வு தூக்கம் அமைதி பெறுவர்.

**எண் 5**

ஏற்கனவே 1,2,3,4 எண்கள் கூறுபவை பற்றி நன்கு விளங்கி கொண்டோம். இனி பொதுமக்கள் ஒருவரோடு ஒருவர் கலந்துபேசி செய்ய வேண்டியதான வாணிபம், அரசாட்சி, பொதுச்சேவை தொடர்பு இவைகளைக் குறிக்கும். 5 எண் பற்றிக் கவனிப்போம். இவ் எண் மேலான சக்தியுடையது. ஒன்பது எண்களுக்கு நடுவே அமைந்திருப்பது போலவே இவ் எண்ணால் குறிக்கப்படுகின்ற மனிதரும் மற்றைய எல்லோரும் நன்கு அறிந்த பிரமுகராக வாழ்வார். இவ் எண் ஜனவசிகரமானது. எல்லோரையும் மோகிக்கச் செய்யும் சக்தி இதற்கு உண்டு. வியாபார விருத்திகளுக்கு "யம்" என்னும் யந்திரத்தகடு வைத்து வணங்கி வருவதை நாம் காணமுடியும். இவ் எண்ணின் பலமுடையோர் சனங்களால் பெரிதும் விரும்பப் படுவர்.

ஒவ்வொரு மாதத்திலும் வரும் 5,14,23 திகதிகளில் பிறந்தோரும், பிறந்த திகதி, மாசம், வருடம் மூன்றையும் கூட்டினால் 5 எண்ணிக்கை வருவோரும் இவ் எண்ணின் ஆதிக்கத்தில் பிறந்தோர் ஆவர் இவர்களில் பெரும்பாலனவர்கள் பிறந்த திகதிக்குரிய வாழ்வு வாழ்ந்து கூட்டெண் 5 வரும் எண் தரும் வாழ்வின் முடிவுப்பலன்களாக அனுபவிப்பர். சிலர் விதிவசத்தால் மிகப் பெரிய பிரமுகராகி வாழ்வு வாழ்ந்து கூட்டெண் 5 வரும் எண் தரும் வாழ்வின் முடிவுப்பலன்களாக அனுபவிப்பர். சிலர் விதிவசத்தால் மிகப் பெரிய பிரமுகராகி வாழ்வில் முன்னேற்றம் பெறுவார். உலக நாடுகளில் பல மன்னர்களும் ஆட்சி புரிந்தோரும் நல்ல மகோன்னத நிலையை அடைந்தவர்களேயாவார்.

**பொதுவான குணங்கள்**

சீக்கிரம், விரைவு, வேகம் உடனே எவ்வாறு கட்டளைகளுடன் செயற்படுவார்கள் சோதிட நூல்கள் இவ் எண்காரர்களின் பலம் இராட்சத கணத்தில் பிறந்தோர் ஆகக் காணப்படுவர் வெகு சீக்கிரமாகவே எந்த விடையத்தையும் கிரகித்துக் கொள்வார் வேகமாகப் பேசுவர். பிறர் எதுவும் விளங்கவில்லை என்று சொன்னால் கோபம் கொள்வர். இவர்களது யோசனையும் புத்தியும் மின்னல் வேகம் உடையவை எனச் சொல்லத் தக்கதாயமையும். மிக எளிதில் குழந்தைகள் போல எவரிடமும் சுலபமாக பழகிவிடுவர். மனதில் தோன்றிய கருத்துக்களை மறைக்காமல் வெளியிட்டுவருவர். எந்தக் கருமமும் தமக்கு சுலபமானவை என எண்ணுவர. பழமையை வெறுப்பவர் புதுமையை விரும்புபவர் மற்றவர்கள் போல் இருக்க வேண்டும் என எண்ண மாட்டார்கள். தம் மனதில் எண்ணியபடி நாகரிகமாக வாழ வேண்டும் என விரும்புவார்கள். அறிவாளிகள் கூறும் நல்ல கருத்துக்களுக்கும் சமூக மாறுதல்களுக்கும் மதிப்பளித்து வருவார்கள்.

இவர்களில் மேலான குணம் படைத்தோர் எல்லோராலும் போற்றப்படுவர். சிறிது கீழ்த்தரமான குணம் படைத்தோர் பலராலும் மதிப்புக்குறைவானவர்களாக சமூகத்தில் மதிக்கப்படுவார். எனவே இவ் எண் கொண்டவர்கள் நல்ல நற்பண்புகளை தம்மிடையே வளர்த்து வருவது மிகவும் அவசியமானதாகும். இவர்களில் பலரும் நீசபங்க ராஜயோகம் கொண்ட அதிர்ஷ்டசாலிகளாக காணப்படுவார்கள். இதனால் பொருளும் புகழும் கொண்டு மேன்மை பெறுவர். சிறுபராயத்திலேயே பெற்றோர் நல்ல பழக்கவழக்கங்களை போதிப்பது அவசியமாகும். நல்ல சகவாசம் இவர்களுக்கு கிட்டவேண்டும். மாற்றங்களை அதிகம் விரும்புவர். இவர்களை வாழ்க்கைத்துணையாக அடைபவர்கள் இவர்களது குணாம்சங்களை நன்கு விளங்க வேண்டும். மற்றவர்களுக்கு உதவி செய்ய விரும்புவர். வாழ்க்கையில் ஏற்படும் தோல்விகள் துக்கம் துயரங்கள் இவர்களைச் சிறிது நேரமே பாதிக்கும்.

இவர்கள் அறிவும் புத்தி விவேகமும் கொண்டவர்களாதலால் உலகாயுத அறிவு என்று கூறப்படுகிற தெய்வ நிச்சிதம் இவர்களது புத்தியை ஆட்சிபுரிகின்றது. இதனால் "ஏன்" என்று கேட்காமல் புத்தியில் தோன்றுகிறபடி இவர்கள் செய்தால் பின்னர் "ஏன்" என்பது தானே விளங்கும். பணம் சம்பாதிப்பதற்காக கஸ்டப்பட்டு உழைக்க இவர்கள் விரும்ப மாட்டார்கள். மனம் எப்போதும் சுலபமாக பணம் சம்பாதிக்கக் கூடிய தொழில்களையே விரும்பும். கவலை இல்லாது செலவு செய்வர். சூதாட்டம் போன்ற விடயங்கள் இவர்களுக்குகடும்பாதிப்பைத்தரும். விவாக விடயங்களில் இவர்களது மனம் சபலமாக அமையும். ஆண் பெண் இரு பகுதியாரும் ஒருவரைக் கண்டதும் நேசிக்க தொடங்கிவிடுவர். 9,18,27 திகதிகளில் பிறந்தவர்கள் இவர்களை மிகவும் நேசிப்பர். ஆயினும் இருபாலரும் ஒருவரையொருவர் கட்டுக்கடங்கி வாழ்வது மிகக் குறைவாகும்.

**உடலமைப்பும் நோய்களும்:**

நடுத்தரமான உயரமும் சிறிது பருமனான தேக அமைப்பும் இருக்கும். ஒரு சிலர் மாத்திரம் உயரம் கூடியவர்களாகவும் மெல்லிய தேக அமைப்பு கொண்டவர்களாக இருப்பர். இது அவரவர் கூட்டு எண்களைப் பொறுத்துக் காணப்படும். நல்ல முகத்தோற்றம் ஆவல் கொள்ளும் கண்கள் அமையப் பெறுவர். பார்வையிலும் பேச்சிலும் காந்த சக்தி இருக்கும். எண்ணின் பலம் குறைந்தால் உடம்பு இளைத்து மெலிந்த தோற்றம் பெறுவர்.

யோசணை கொண்டவராதலால் மனம் சாந்தியை இழக்கும். தூக்கம் கெடும். நரம்பு பலவீனம், கால் கைகள் சோர்வடைதல், வாதம் ஏற்படுதல் மற்றும் மூளை சம்பந்தப்படும் நோய்களும் ஏற்படும். இதற்கு யோகாசனம் பிராணாயாமம் எண்ணெய் ஸ்னானம் இவற்றை நல்ல ஒழுங்கு முறையாக பின்பற்றி வந்தால் மிகவும் நல்லது. நோய்கள் குறைவடைந்து ஒய்வு தூக்கம் அமைதி பெறுவர். நரம்புகளிற்குப் பலம் தரக் கூடிய பருப்பு வகைகள் தானிய வகைகள் கீரை வகைகள் பழ வகைகள் இவற்றை உணவில் சேர்ப்பது சுகம் தரும்.

**எண்கள் தருபவை: (பிறப்பு)**

***5ஆம் திகதியில் பிறப்பவர்கள்-*** இவர்கள் சிறுவயதிலேயே பெரிய இலட்சியங்களால் கவரப்படுவர். வசீகரமான குணங்களும் பிறரை மதித்தலும் எல்லா மேலான குணங்களும் நிரம்பினவராக இருப்பர். பிறருக்குப் போதிப்பவராவர். தெய்வீகமான வாழ்க்கை சிலருக்கு அமைந்து காணப்படும்.

***14ஆம் திகதியில் பிறப்பவர்கள்-*** இவர்கள் பிரயாணத்தை அதிகம் விரும்புவர். பொருட்களை சேர்ப்பதில் ஆர்வம் இருக்கும். இதனால் எல்லா வகையான பெரும் வியாபார முயற்சிகள் வெற்றி தரும். பணம் அதிகம் இருக்கும். சிலரை நம்பி நஷ்டமும் வரும். இயற்கையால் வியாபார நிறுவனங்களுக்கு பாதிப்பு வரலாம். எனவே வியாபார நிறுவனங்களை நல்ல பாதுகாப்பான இடங்களில் அமைப்பதில் கவனம் வேண்டும். நல்ல காதல் வாழ்வு அதிர்ஷ்டமான செல்வமான வாழ்வைத் தரும்.

> **சுய முயற்சியும் தன்நம்பிக்கையும் உழைப்பையும் குறிக்கும் ஜனவசியமும் லாபம் தரும். பெரும் புகழும் வசீகரமான வாழ்க்கையும் அமையும். அயல் நாட்டுப் பயணங்கள் தரும் தெய்வ பக்தி இருக்குமாயின் மாத்திரம் இவை எல்லம் அமையும்.**

***23ஆம் திகதியில் பிறப்பவர்கள்-*** இவர்கள் சாதிக்கப் பிறந்தவர்கள் என்று சொல்லலாம் நல்ல இராஜ வசியமும் ஜனவசியமும் இவர்களுக்கு அமையும். பலரும் இவர்களைப் பாராட்டுவர். பெயர் எண் சிறப்பானதாக அமையப் பெற்றால் தேசத்தை ஆழ்பவராக இவர்கள் காணப்படுவர். இவர்களுக்கு தேவையானது நல்ல பண்புகளும் நடத்தைகளுமே ஆகும். இவை இருந்தால் சரித்திரம் போற்றும் பெரியவர்களாக வாழ்வர்.

**பெயர் எண்கள் தருபவை :**

**பெயர் எண் 5 :** ஜன வசியத்தையும் சுகமான வாழ்க்கையையும் புகழையும் உயர்த்தும் மிகவும் கம்பீரமான வாழ்க்கை அமையும். செலவு ஏற்படலாம். விடாமுயற்சியும் மனவலிமையும் வெற்றிதரும்.

**பெயர் எண் 14:** வியாபார முயற்சிகளுக்கு இது ஏற்றதாகும். வியாபார முயற்சிகள் வெற்றிதரும் பலரை சந்திப்பதற்கு உரிய நல்ல சஞ்சார நிலை உண்டு. பிறரை நம்பி பழகுவதில்" நம்பி நடக்கும் நிலையும் நம்பி நடவாத நிலையுமாய்" இருந்தால் நஷ்டம் மற்றும் ஏமாற்றத்தை தவித்துக்கொள்ளலாம். வாகனப்பயனத்தில் எச்சரிக்கை அவசியம். காதல் வாழ்வில் எச்சரிக்கையும் நிதானமும் அவசியம்.

**பெயர் எண் 23:** இது அதிஸ்டகரமாண எண் ஆகும். எடுத்த காரியங்களில் வெற்றியும். எண்ணிய கருமங்கள் கைகூடிவரவும் செய்யும். பிறரால் செய்யமுடியாத கருமம் எதுவும் இவர்கள் செய்து முடிப்பர். அளவான முயற்சியுடன் ஈடுபட்டால் நல்ல அதிஷ்டசாலிகளாக வாழ்வார்.

**பெயர் எண் : 32** இவர்களுக்கு பொதுசன ஆதரவு எப்போதும் கிடைத்துவரும். விதம் விதமான மனிதர்களை கவர்வார்கள். புதுக் கருத்துக்களை வெளிவிடுவார்கள். ஏமாற்றம் இறக்கம் இடையிடையே காணப்படும்.

**பெயர் எண் : 41** இது ஜன வசியத்தைக் கொடுக்கும் எண் ஆகும். இவர்களின் செயல்களை யாவரும் மதித்து நடப்பர். இலச்சியவாதி போல் காட்சிதருவர். நல்ல கீர்த்தியுடன் வாழ்வார்கள். தங்களது சக்திக்கு மிஞ்சிய காரியங்களில் துணிந்து இறங்கு

வார்கள் சில சந்தற்பங்களில் தோல்வியைக் கொடுத்து விடும். எனவே விழிப்புணர்வுடன் தமது கருமங்களை தொடர வேண்டும்.

**பெயர் எண் 50 :** நல்ல விவேகம் தீவிர ஆராட்சியில் ஈடுபடும் இவர்களிடம்கல்விகேள்புலமைகள் காணப்படும். புகழ்பூத்த ஆசிரியர், போதனாசிரியர்,விரிவுரையாளர் நிலைகளைப்பெறுவர். இவர்களில் சிலர் பணம் சம்பாதிப்பதியே குறிக்கோளாக கொண்டு செயற் படுவர் எது எவ்வாறாக இருப்பினும் வாழ்வின் நடுப்பகுதியின் மேல் தான் நல்ல அதிஸ்டகரமான வாழ்வு அமையும். ஆயுள் பலமுண்டு.

**பெயர் எண் 59:** தீவிர ஆராட்சி யாளர்களாகவும் நகைசுவையாளர் களாகவும் எழுத்தாளராகவும் இவர்கள் இருப்பார். இவர்களுக்கு எழுத்து மூலம் ஐஸ்வரியம் உண்டாகும். பொது ஜன ஆதவுகாணப் படும்.கல்விச்சிறப்புஇல்லாவிடினும் மதிப்பு மிக்க பதவிகளில் அமர்ந்து கொள்வார். நரம்பு சம்மந்தமான வியாதிகளால் பாதிக்கப்படுவர். நல்ல பழக்கவழக்கம் இருப்பின் மிக்க அதிஸ்டம் கிடைக்கும்.

**பெயர் எண் 68:** கணிசமான வாழ்வு முன்னேற்றமும் அதிஷ்டமும் இந்த எண் கொண்டோருக்கு கிடைக்கும். சாதிக்க முடியாத பெரிய கருமங்களில் இவர்கள் ஈடுபடக்கூடாது அவ்வாறு ஈடுபட்டால் தோல்வி துன்பம் துயரம் சந்திப்பர். மனதில் பேராசை கொள்வர் இது வாழ்க்கையை பாதிக்கும்.

**பெயர் எண் 77:** சுய முயற்சியும் தன்நம்பிக்கையும் உழைப்பையும் குறிக்கும் ஜனவசியமும் லாபம் தரும். பெரும் புகழும் வசீகரமான வாழ்க்கையும் அமையும். அயல் நாட்டுப் பயணங்கள் தரும் தெய்வ பக்தி இருக்குமாயின் மாத்திரம் இவை எல்லம் அமையும்.

**பெயர் எண் 86:** மிகச் சிரமப் பட்டு வாழ்வில் முன்னேறுவர் யோக்கியமாக நடந்து ஆதரவைப் பெறுவர். செல்வந்தர்கள் சிலர் இவர்களுக்கு பொருள் கொடுத்து உதவுவார்கள் மற்றவர்கள் தரும் ஆதரவால் சுகவாழ்வும் சந்தோசகரமான வாழ்வும் அமையும் பொருள் சேர்த்து சுகபோக வாழ்க்கை பெறுவர்.

**பெயர் எண் 95:** இந்த எண் நல்ல கட்டுப்பாடான வாழ்க்கயையும் வீர தீர செயல்களையும் புகழையும் குறிக்கிறது. நல்ல நூதனமான பொருட்களடங்கிய வியாபாரத்தால் பொருட்கள் சேரும்.

**பெயர் எண் 104 :** நல்ல தொழில், வாழ்வு, உழைப்பு இவை எல்லம் உண்டு அரிய பல காரியங்களை செய்வார்கள். ஆயினும் சில எதிர்பாரத மாறுதல்கள் நடக்க சந்தற்பம் உண்டு.

**தொழில் :** வியாபார முயற்சிகள், ஊடகம், தகவல்கள் பரிமாறம், கணக்குப் பதிவுகள் தொழில் நுட்ப பொறிமுறைகள் இவை அடங்கும்.

**அதிஸ்ட நாள்கள்:** 5,9,1 சிறப்பானவை

**துரதிஷ்ட நாட்கள்:** 2,4,7 மத்திம அளவில் பலன் தரும்.

**வர்ணம்:** சாம்பல் நீலம் மிக நன்று. ஏனைய மெல்லிய லேசான வர்ணங்களும் நன்மையாகும்.

பச்சை கறுப்பு வர்ணம் மிகவும் பாதிப்பாகும்.

ஆங்கில எழுத்து 5 க்கு உரியவை: E,N,H,X இவை நான்கும் ஆகும்.

இரத்தினம்: வைரக்கல். இதைவிட Zircon வெள்ளை கல்லும் பொருத்தமுடையதாகும்.



# அவங்கட ஏசிக்காற்று... நம்மட ஓசிக்காற்று

சுட்டு
chuddu.deepam@gmail.com

‘கிலோ மீற்றருக்கு 50. லோங் ரிப் போகனும்னா கிலோ மீட்டருக்கு 40. செம்மயா எயார்கன்டிசன் இருக்கும். வெளிய வெய்யில் கொளுத்தினாலும் உள்ள ஜில்னு இருக்கும்.’

வேற எதுவும் இல்லைங்க. நம்ம யாழ்ப்பாணம் வைத்தியசாலை முன்னாடி நிக்கிற ‘டாக்சி கார்’ பற்றித்தான் சொல்கிறேன்.

அழகா குட்டி குட்டியா ஆமைக் குஞ்சு மாதிரி ‘டாடா நனோ, அம்பாஸ்டர்’போன்ற கார்களை நாம் அன்றாடம் காண்கிறோம். பெரும்பாலும் நம்ம ஊர் வாசிகள் இவ்வகை கார் டாக்சியை விரும்புவதில்லை. முதற்காரணம் விலை அதிகம் என்று நினைக்கிறார்கள். ஆனால் உண்மை நிலை என்ன?

சாதாரணமான ஓட்டோ ஓட்டுனர்கள் ஒரு கி.மீ தூரத்துற்கு 50 ரூபா தொடங்கி அதற்குமேல் அறவிடுகின்றனர். ஆனால் வாடகைக் காரோ ஒரு கி.மீ தூரத்திற்கு ஓட்டோவின் அடிமட்ட விலை போன்று 50 ரூபாய் தான் அறவிடப் படுகிறது.உங்கள் பயணங்கள் நெடும் தூரமாக அமைந்தால் இன்னும் பத்து ரூபாவால் குறைக்கப்பட்டு கி.மீ க்கு 40 ரூபாவாக்கப்படுகிறது.

‘நாங்களும் ஓட்டோ சங்கத்திற் தான் பதிவு பெற்றிருக்கிறோம். மாதம் ஐநூறு ரூபா இவ்விடத்திற்கான வரியாக செலுத்துகிறோம்’ என சொல்கிறார் டக்சி ஓட்டுனர் ரமணன். ‘எப்பவுமே லோங் ரிப் ஆக இருந்தாலும் சரி நோர்மல் ரிப்ணாலும் சரி நான் எயார் கண்டிசன் ஓன் பண்ணியேவச்சிருப்பேன். பசஞ்சர்ஸ்ட சௌகரியம் தான் எனக்கு முக்கியம். நல்ல மெலொடி சோங்ஸ் கலக்சன் என்னட்ட இருக்கு.அதைஅளவான சத்தத்தோட போட்டு வச்சிருப்பன்’ என்கிறார்.

என்னதான் டக்சியில் வசதி அதிகம், கட்டணம் குறைவு என்றாலும் நம்மவர்களிற்கு ஓட்டோக்கள்தான் கதி. டக்சி அதிக செலவாகுமென நினைக்கிறார்கள். இதனை உங்களால் மாற்றவே முடியாதா என கேட்டால், ‘சனங்களுக்கு டக்சி காரோட ரேட் அவ்வளவாக தெரியிறதில்லை. என்னமோ ஓட்டோவை விட இரண்டு மூண்டு மடங்கு அதிகமாக அறவிடப்படும் என்டு நினைக்கினம். ஆனால் உண்மை கொஞ்சம் கொஞ்சமாக நிலமை மாறுது. ஆனால் மற்ற இடங்களில இருந்து வாற ஆட்கள்,சிங்களவர்கள் பெரும்பாலும் எங்களிடமே வருகிறார்கள். வெளிநாட்டவர்கள்,வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் எம்மை தவறவிடுவதில்லை’ என ரமணன் பேசிக் கொண்டிருக்கும்போதே, ஒரு தம்பதியினர் டக்சியை நோக்கி வந்தனர். சிங்கள தம்பதியாக இருக்கலாம். எதுவும் பேசாமல் ஏறி உள்ளே உட்கார்ந்தனர். அவர்களிற்காகவே காத்திருந்தவர்போல ரமணனும் கிளம்பினார். ‘சரிதம்பி சந்திப்போம்’ எனக் கூறிவிட்டு கிளம்பினார்.

டக்சி புறப்பட்டதும், சற்று தள்ளி மத்திய பேரூந்து நிலையத்திற்கு கிட்ட நின்ற ஓட்டோக்காரர் ஒருவரை ஓரங்கட்டினோம். பெயர் சந்திரனாம். ‘என்ன பாஸ்... இந்த டக்சிக்காரர் உங்கள வயிற்றில அடிப்பாங்களா?’ என்றோம். ஹாஹா என பெரிதாக சிரித்தார்.

‘அவங்களும் எங்கட சங்கத்துக் காரர்தான். அவங்களுக்கு நாலு சில்லு. நமக்கு மூன்று சில்லு. அவங்களுக்கு ஏசிக்காத்து. நமக்கு ஓசிக்காத்து. அவ்வளவுதான் வித்தியாசம்’ என டி.ஆர் பாணியில் பேசினார்.

டக்சிகளின் வருகையை ஓட்டோக்காரர்கள் எப்படி பார்க்கிறார்கள்? வில்லனாக பார்க்கிறார்களா? அது பாவம், ஓரமாக நின்றுவிட்டு போகிறதென நினைக்கிறார்களா என்பதை அறிய பேச்சுக்கொடுத்தோம்.

‘டக்சிக்களால் எங்களிற்கு ஒன்றும் நஸ்டம் வரவில்லை. எங்களுக்கான சனக்கூட்டம் வந்துகொண்டுதான் இருக்கிறது. அது எப்போதும் குறையாது. அதே நேரம் டக்சிக்காரர்களின் வருமானமும் குறைவின்றி வருகிறது. அவர்களுக்கு ஒரு கூட்டம் என்றால் எங்களுக்கு ஒரு கூட்டம்’.

ஓட்டோக்காரர்களின் ஆனை விலை குதிரைவிலை ரேட் பற்றி கேட்டோம். ‘ஒரு கி.மீ க்கு 50தான் சராசரி ரேட்.. ஆனால் குறைத்தும் கூட்டியும் நாங்கள் வாங்குவோம். வெயிட்டிங் சார்ஜ் போன்ற சமாச்சாரங்கள் இருக்கில்லையா? வேண்டுமானால்ஒருகி.மீதூரம்என்னோடு வா நான் உனக்கு 30 ரூபாய் தான் எடுப்பன்’ என சென்ரிமென்ட் கொக்கி வீசிக்கொண்டிருக்கும் போதே, அவரிடம் பயணிகள் வந்தனர். ஒருதாயும் சிறுவனும்.

சிறிதுநேரம் பேரம்பேசல் நடந்தது. இதற்குள் மீற்றர் எங்கேயிருக்கிறதென தெரியவில்லை. அந்த பெண்மணியும் விடாமல் பேரம் பேசினார். ஓட்டோக்காரன் கொஞ்சம் இறங்கி வந்ததை போலிருந்தது. அவர்கள் ஏறி உட்கார, ஓட்டோ பறந்து சென்றது.

மக்களே, இதன்மூலம் உங்களிற்கு சொல்லப்படும் நீதி என்னவெனில், வெளித்தோற்றத்தை கண்டு வெருண்டு விடாதீர்கள் என்பதே. யாழ்ப்பாணத்தில் டக்சிக்கள் என்றாலும் சரி, ஓட்டோக்கள் என்றாலும் சரி இரண்டுக்குமே சமஅளவான ரேட்தான். எது சௌகரியமோ, அதில் ஏறிக் குந்திக் கொள்ளுங்கள்.

ஏசிக்காற்றா, ஓசிக்காற்றா எல்லாம் உங்கள் விருப்பம்.





# அம்பலமாகும் அவன்கார்ட்

தேசிய அரசாங்கத்தை விழிபிதுங்க வைத்துள்ளது அவன்கார்ட் விவகாரம். மைத்திரியும், ரணிலும் நடப்பதை பார்த்துக் கொண்டு ஆளாளுக்கு கையை பிசைந்து கொண்டு நிற்கத்தான் முடிகிறது. கூட்டுக்குள் அடிபிடியை ஆரம்பித்து வைத்துள்ளது அவன்கார்ட் விவகாரம்.

கடற்படையினரின் துப்பாக்கிகளை பாவித்தது. விற்றது என ஏற்கனவே பல சர்ச்சைகள் இன்னும் தீராமல் இருக்கும் பொழுது, அவன்கார்ட் நிறுவனத்தின் பின்னணி, தொடர்பில் இருந்தவர்கள் பற்றிய அதிர்ச்சி கதைகள் வெளிவந்த் வண்ணமுள்ளன.

நல்லாட்சி கூட்டுக்குள்ளேயே ஒருதரப்பு அவன்கார்ட்டை பாதுகாக்கவும், இன்னொரு தரப்பு சந்தி சிரிக்க வைக்கவும் பகீரதப் பிரயத்தனபட, உள்வீட்டு கதைகள் எல்லாம் அம்பலத்திற்கு வந்து கொண்டிருக்கிறது.

முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் 'நிறைவேற்று அதிகாரங்களுடன்' உலாவிய காலத்தில் அவன்கார்ட் நிறுவனத்தை உருவாக்கினார். பாதுகாப்பு அமைச்சிற்கும் அந்த நிறுவனத்திற்குமிடையில் என்னவிதமான தொடர்பு இருந்தது, ஏதேனும் பொறுப்புகூறும் நடைமுறைகள் இருந்ததா என்பதையும் உறுதியாக கூறமுடியவில்லை.

எனினும், பெரும் பணம்புழங்கும் நிறுவனமாக அவன்கார்ட் இருந்தது என்பது மட்டும் தெளிவாகிறது. அத்துடன் பெரும் அரசியல்வாதிகள் பலரும் 'டீல்' வைத்திருந்ததை ஒருவர் மாறி ஒருவர் அம்பலப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த சர்ச்சையில் சிக்கி அதிகம் சின்னாபின்னமாவது திலக் மாரப்பன, விஜயதாச ராஜபக்ச ஆகியோர்தான். திலக் மாரப்பன பதவியையே ராஜினாமா செய்து போய்விட்டார். விஜயதாசாதான் தற்போது அவன்கார்ட்டிற்காக மல்லுக்கு நிற்கிறார்.

அவன்கார்ட் விடயத்தை அம்பலப்படுத்துவதில் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, அமைச்சர் ராஜித சேனாரத்ன ஆகியோர் விடாப்பிடியாக நிற்பதே இரகசியங்கள் அம்பலமாவதற்கு முக்கிய காரணம்.

சரத் பொன்சேகாவின் வாயை மூடவைத்தால் அவன்கார்ட் நிறுவனம் தப்பிப்பிழைத்துவிடும் என நினைத்தோ என்னவோ, அண்மையில் அவன்கார்ட் நிறுவனத்தின் பணிஇழந்த ஊழியர்கள் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தி, பொன்சேகாவிற்கு அவன்கார்ட் நிறுவனம் பெருந்தொகை பணம் கொடுத்ததென்று பரபரப்பு குற்றம்சுமத்தினார்கள். பொன்சேகாவுடன் நடந்த குறுந்தகவல் பரிமாற்றமென ஒன்றையும் வெளியிட்டனர். அவர்களின் பிரதான குற்றச்சாட்டு பொன்சேகாவின் உதவியாளர் அவர்களிடம் மாதாந்த சம்பளம் பெற்றார் என்பதே. எனினும், பொன்சேகாவிற்கு பணம் வழங்கியதை அவர்களால் உறுதி செய்ய முடியவில்லை. இது அவர்களின் குற்றச்சாட்டின் நம்பகத்தன்மையை கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

பொன்சேகாவின் அதிரடி பாணி ஊரறிந்ததுதானே. அவன்கார்ட்டின் பின்னணியில் அமைச்சர் விஜேதாச ராஜபக்சவும் உள்ளார் என நீண்டநாளாக குற்றம் சுமத்தி வந்தவர், சிலதினங்களின் முன் ஒரு அதிர்ச்சி ஆவணத்தை வெளியிட்டுள்ளார்.

அவன்கார்ட் நிறுவன தலைவர் நிஷங்க சேனாதிபதிக்கும், அமைச்சர் விஜேதாச ராஜபக்சவிற்குமிடையிலான நெருங்கிய நட்பை அம்பலப்படுத்தியுள்ளார். அண்மையில் அமெரிக்காவின் டிஸ்னிலாண்ட்டிற்கு இருவரும் குடும்பமாக சென்று விடுமுறையை கழித்துள்ளனர். இதன்போது அவர்கள் எடுத்துக்கொண்ட புகைப் படங்கள் எப்படியோ பொன்சேகாவின் கைகளிற்கு சென்று, அவற்றை அம்பலப்படுத்தியுள்ளார். அந்த படங்களே இதில் இணைக்கப் பட்டுள்ளன.



அவன்கார்ட் நிறுவனம் ஊடகவியலாளர்களிற்கும் இலஞ்சம் வழங்கியதென அமைச்சர் ராஜிதவும், பொன்சேகாவிற்கு துணையாக இன்னொரு பக்கம் பற்றவைத்துக் கொண்டிருக்கிறார்.

இவ்களிற்கிடையிலான மோதல் நமக்கு தெரியாமல் நடந்த அவன்கார்ட் நிறுவன தில்லுமுல்லுக்கள் பலவற்றை வெளிச்சத்திற்கு கொண்டு வருகிறதென்பதில் மட்டும் திருப்திப்படலாம்.









வவுனியா முருகனூர் வித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்ற ஒளிவிழாவின் காட்சிகள்.

# கீப் யவர் லவ்

சுட்டு
chuddu.deepam@gmail.com

ஒரு பையனாக இருந்தாலும் சரி பெண்ணாக இருந்தாலும் சரி பதின்மவயது தொட்டாலே படிக்கிறமோ இல்லையோ நமது மனசில் ரியூப் லைட் எரியத் தொடங்கும், உச்சந்தலைக்குள் மணியடிக்கும். அதுதான் காதலை சொல்கிறோம்.

இந்த காதல் வாழ்க்கையில பல்வேறுபட்ட சுவாரஸ்யமான அம்சங்களை கொண்டிருக்கும். பதின்ம வயதில் ஒரு பெண்ணை யோ ஆணையோ பார்க்கிறோம் அவர்களிடம் நமது மனசை பறிகொடுக்கிறோம். பின்பு கொஞ்சம் கொஞ்சமா பேசி பழகி அது காதலா மலருது. ஆ! அந்த உணர்வை வார்த்தையால் சொல்ல முடியாது.

**தாழ்வு மனப்பான்மையும். ‘அவள் அவ்வளவு அழகாக இருக்கிறாள். இருக்கிறத விட்டிட்டு பறக்கிறதுக்கு ஆசைப்பட்டிட்டமோ’ இப்படி தாழ்வான எண்ணங்களை விட்டுவிடுங்கள். கடவுளால் படைக்கப்பட்ட எல்லோரும் மிகவும் அழகானவர்கள் தான்.**

உலகத்தின் ஆகப்பழதான காதலைப் போன்ற புதுமை வேறொன்றும் கிடையாது. எல்லோரும் செய்யும் காதலைப்பற்றி திகட்டாமல் எவ்வளவும் பேசலாம் தான். என்றாலும் காதலை எப்படி சொல்வது, எப்படி காதலிப்பது என்பது பற்றியெல்லாம் அல்ல. அதைப்பற்றி நம்மவர்களிற்கு நிறையத் தெரியும். இப்ப நாங்கள் சொல்லவருவது என்னவென்றால், காதலை எவ்வாறு தக்கவைத்துக் கொள்வது. அதாவது காதலில் பிரிவு வராது எவ்வாறு பார்த்துக் கொள்வது என்பதைப்பற்றி பார்க்கப்போகிறோம்.

காதல் பிரிவுகளிற்கு முக்கிய காரணம் சந்தேகம். இது பொதுவாவே ஆண்களுக்கு அதிகம். அதிலும், கொஞ்சம் அழகான காதலி வைத்துள்ள பலரும் தினம்தினம் உள்ளுக்குள் செத்துப்பிழைப்பார்கள். முகத்தை சுளிக்காமல் ஒத்துக்கொள்ளுங்கள் பாஸ். நாம் காதலிக்கிற பெண், ஒரு பையனோட சிரிச்சு பேசினால் சந்தேகம். தொலைபேசியில் நம்பர் பிசியென்று வந்தால் சந்தேகம். சட் பண்ணிணா சந்தேகம். பேஸ்புக்கில் கொமண்ட் அடித்தால் சந்தேகம். கொமண்ட் வாங்கினால் சந்தேகம். இப்படி ஏராளம் சந்தேகங்கள்.

ஹலோ லேடீஸ், நீங்களும் இதுக்கு விதிவிலக்கல்ல. இப்படி எல்லா விசயத்திற்கும் சந்தேகம் அதெல்லாம் விட்டுட்டு நேரடியா பேசலாமே. ஏன் என்ன பிரச்சினை என மனம் விட்டு பேச ஆரம்பித் தால் உண்மையான காரணம் வெளிப்பட்டுவிடும். காதலிக்க தொடங்கி சில நாட்கள் மிக சுவாரஸ்யமாகப் போகும். ஆனால் சில நாட்களில் சண்டை, கசப்பு, பிரிவு என்று ஆகி விடுகிறது. ஏன் இது நடக்கிறதென யாரும் ஆராய்வதில்லை. காரணம் சந்தேகம். ஆகவே, காதலர்களோ நேரடியாக பேசிக்கொள்ளுங்கள். பரஸ்பரம் நம்பிக்கையாக இருங்கள்.

ஒருவிசயம் பிடிக்கவில்லையா? பக்குவமாக எடுத்துசொல்லுங்கள். உறவுகள் மெய்ப்படும், கனவுகள் கைவசமாகும்.

காதற்பிரிவில் இரண்டாவது முக்கிய காரணம் விட்டுக்கொடுப்பு. உங்கள் இரண்டு பேருக்கிடையில் ஏதாவது பிரச்சினை ஏற்பட்டு விட்டது. யாராவது ஒருவர் விட்டுக்கொடுத்துத்தான் ஆக வேண்டும்.யாரில்பிழைஇருந்தாலும் சரி, ‘நான் செய்தது பிழை’ என மன்னிப்புக் கேளுங்கள் அப்டியே உருகிப்போய்விடுவார்கள். உடனே, ‘இல்லப்பா என்மேலயும் பிழை இருக்குத்தான். ஐம் சோ சொறி’ என உருகுவார். இப்படியொரு ஈசி வழி இருக்க, ‘நீ அப்படி செய்தாய் தானே. நான் செய்தால் என்ன?’ என ஏட்டிக்குப்போட்டியாக நடந்து விடயத்தை ஏடாசுட மாக்கிவிடாதீர்கள். காதல் பிரிவு களிற்கு முக்கிய காரணங்களில் இதுவும் ஒன்று. காதலில் விட்டுக் கொடுப்பு என்பது மிக முக்கிய மானது என்பதை மனதில் வைத் துக்கொள்ளுங்கள். விட்டுக் கொடுத்துப்போதல் கட்டுக்கடங் காகாதல்.

காதலில் விட்டுக்கொடுப்பு எவ்வளவு முக்கியமோ அதே போன்றுதான் மற்றவர்களிடையே விட்டுக்கொடுக்காததும் மிக முக்கியம். ஓர் ஆணாக இருந்தால் மற்றவர்களிடத்தில் உங்கள் காதலியை விட்டுக்கொடுக் காதீர்கள். காதலியாக இருந்தால், உங்கள் காதலனை நண்பர் களிடத்தில் விட்டுக்கொடுக் காதீர்கள். காதலர்களுக்கிடை யிலான அந்தரங்கமான விடயங் களில் நண்பர்களை தவிருங்கள்.

நண்பர்கள் வேறு காதல் வேறு. நண்பர்கள் ஒரு பாதையிலும், காதலர்கள் ஒரு பாதையிலும் தான் எப்போதும் செல்ல வேண்டும். முக்கியமான தனிப்பட்ட விசயங்களில் இரண்டும் கலந்தால் பிரச்சனைதான். எப்பொழுதும் வெளியில் உங்கள் காதலை விட்டுக் கொடுக்காதீர்கள். நட்பு நமது உயிர் மூச்சு என்றால் காதல் இதயத் துடிப்பெனலாம்.

இன்னொரு முக்கிய விடயம் பழக்கவழக்கங்களை மாற்ற நினைத்தல். உங்களுக்கு அவனிடம், அவளிடம் ஒன்று பிடிக்காவிட்டால் உடனே அதை மாற்ற சொல்வார்கள். ‘எப்பிடி பிடிச்சுதோ அப்பிடியே ஏத்துக்கோங்க. அவங்கள மாத்த நினைச்சிங்கனா அவங்க உங்கள மாத்திட்டு போய்ட்டே இருப்பாங்க’ என ஒரு சினிமா டயலொக்கும் உள்ளது. பிடிக்காத விசயத்தை கொஞ்சம் கொஞ்சமாக சொல்லிப்பாருங்கள். உதாரணத் திற்கு அவளது ஆடை பிடிக்காவிட் டால் தன்மையாக கூறுங்கள். அதை விட்டு ‘நீ இப்படி போடக்கூடாது’ என கட்டுப்பாடு விதிக்காதீர்கள். அதுபோல பையன் தண்ணிய வெண்ணிய பாவிப்பது பிடிக்கவில் லையா கேர்ள்ஸ். பக்குவமாக சொல்லி மாற்ற முயலுங்கள்.

அதுபோலத்தான் கண்ணாடி யின் முன் நின்று உங்களைப் பாருங்கள். உங்களை நீங்களே ரசிக்கப் பழகிக்கொள்ளுங்கள். கொஞ்சநாளில் நீங்களும் மிகவும் அழகாகத்தான் தெரிவீர்கள். முதலில் உங்களுக்குள் உற்சாகம் வரவேண்டும். நான் இழிவானவன் என நீங்கள் குறுகிப்போனீர்கள் என்றால் சமூகமும் உங்களை இழிவாகத்தான் பார்க்கும். எனவே தாழ்வு மனப்பான்மையை தூக்கி எறியுங்கள். தலை நிமிர்ந்து நில்லுங்கள்.

அடுத்தது, இடைவிடாத காதல் மழை என்பதைப் போல, எப்பொழுதும் impress பண்ணிக் கொண்டேயிருக்க வேண்டும். impress பண்ணுகிறேன் பேர்வழி யென நம்மவர்கள் சிலர் வாங்கிக் கட்டுவதுமுண்டு. ஓர் அன்பான வார்த்தை, பரிசுப்பொருள், நற்செயல் என ஏராளம் வழிகள் உள்ளன. impress பண்ணுவதை புதிதுகுதிதாக செய்தால் காதலில் சலிப்புத்தன்மை ஏற்படாது. திரும்ப திரும்ப நினைவுகூறுங்கள், காதலை தக்கவைத்துக் கொள்ளுங்கள்.

இழிவான வார்த்தைகளை பிரயோகிக்காதீர்கள். அப்படி நீங்கள் பேசுவதால் கேட்பவர் மனசு மிகவும் வேதனையாகிவிடும். இது முக்கியமாக ஆண்களுக்குரி யதாகும். பெண்களை நீங்கள் இழிவான வார்த்தைகளால் திட்டு வதால் அவர்களுக்கு உங்கள் மேல் நல்ல அபிப்பிராயம் எழாது. கோபப் படாதீர்கள். நின்று நிதானமாக சிந்தியுங்கள், நான் பேசுவது சரியா என்று. ‘அந்த காதல் ஜோடி எப்படி அன்பாக இருக்கின்றார்கள். இவன் எப்பொழுதும் என்னை திட்டுகின்றான்’ என்று மற்றவர் களுடன் ஒப்பிடும் தன்மை கொன்டவர்கள்தான் பெண்கள். எனவே அதை தெரிந்து நடந்து கொள்ளுங்கள். பெண்மனசு ரொம்பவே மென்மையானது.



சரி, இதையெல்லாம் கவனத் தில் கொண்டும், காதலில் சிறு சண்டைகள், சின்னக் கோபங்கள் வந்து உங்கள் அன்பானவர்களுட னான உரையாடல் துண்டித்ததா? மற்றவர் முதலில் பேசட்டும் என்ற நுபுழு எண்ணத்தைத் துக்கி சுவரில் அடியுங்கள். உங்கள் உயிரான உறவுடன் பேச என்ன ஈகோ? பிழை உங்கள் மீது இல்லை எனினும் முதலில் பேசி சமாதானப்படுத் துங்கள்.

இவையெல்லாம் உங்கள் காதல் வாழ்க்கைக்கு ஒரு எக்ஸ்ரா எனேர்ஜி பூஸ்டர். அழகான உங்கள் பயணம் தொடர வாழ்த்துக்கள் டியூட்ஸ்.





# வெங்காய சோஸ்

**தேவையான பொருட்கள்**

பெரிய வெங்காயம்2, தண்ணீர் 1 கப், வெண்ணைய் 50கிராம், மிளகாய் தூள் 1 1/2 தேக்கரண்டி, மைதா மா1 மேசை கரண்டி, கடுகு தூள் 1/2 தேக்கரண்டி

**செய்முறை:**

முதலில் வெங்காயத்தை சிறு சிறு துண்டுகளாக நறுக்கி கொள்ளவும்.

தாச்சியை அடுப்பில் வைத்து வெண்ணெய் போட்டு உருகியதும் வெங்காயத்தை போட்டு பொன்னிறமாகும் வரை வதக்கவும். மைதா மா ,உப்பு ,மிளகாய் ,தூள் ,கடுகு தூள் என்பவற்றை தண்ணீரில் சேர்த்து கலக்கவும்.

இக் கலவையை வதக்கிய வெங்காயத்தின் மீத ஊற்றி 5 நிமிடம் மிதமான தீயில் கொதிக்க விடவும். அடுப்பில் வைத்து தோல் நீக்கிய தக்கதளிப்பழங்களையும் சேர்த்து பின்னர் பரிமாறலாம்.



# புருவங்களில் ரோமங்கள் வளர

பெண்களின் முக அழகை மேலும் மெருகூட்டுவதில் புருவங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. ஆனால் சிலருக்கு றோமம் வளரவே வளராது. ஐ புரோ பென்சிலால் தீட்டு தீட்டென்று தீட்டுவர். அப்படிப்பட்ட பெண்கள் இனி கவலையை விடுங்கள். இதோ உங்கள் றோமம் வளர சில வழிமுறை.

தினமும் இரவில் தூங்குவதற்கு முன்னர் புருவத்தில் விளக்கெண்ணை தடவி மசாஜ் செய்து விட்டு அப்படியே தூங்க வேண்டும். மறு நாள் காலையில் எழுந்து கழுவ வேண்டும். இப்படி சில வாரங்கள் செய்து வந்தாலே றோம வளர்ச்சியில் நல்ல முன்னேற்றம் கிடைக்கும்.

மேலும் நீங்கள் முகத்திற்கு மேக் அப் போடும் போது புருவத்தையும் கவனிக்க வேண்டும்.

புருவ றோமங்கள் பராமரிப்பதற்கு என்று சில பிறஸ்கள் உள்ளன. அவற்றை வாங்கி தினமும் புருவத்தை வாரி விட வேண்டும்.

இப்படி செய்து வந்தாலே புருவ றோம வளர்ச்சியில் நல்ல மாற்றம் காணலாம். இன்றே செய்து பாருங்க்ள உங்கள் புருவத்திற்கு 8 மாதங்களில் பலன் கிடைக்கும்.

# பனிக்கால காய்கறிகள்

பனிக் காலம் என்று வந்து விட்டால் நமது உடல் இயல்பான சூடு பிடிக்க ஆரம்பித்து விடும். அப்போது எமது உடம்பின் உஸ்னத்தை சமன் படுத்த குளிர்சியான காய்கறிகள் சாப்பிடுவது அவசியம். பனிக் கால பிரச்சினைகளான இருமல் ,காய்ச்சல் ஆகியன ஏற்படாமல் கீழ் கண்ட காய் கறிகள் நம்மை பாதுகாக்கும்.



**வெண்டிக்காய்** - குளிர்ச்சியான தன்மை கொண்டது. இதனுடன் சீரகம் சேர்த்து சமைப்பது சிறந்தது. இது வறண்ட குடலை பதப்படுத்தும். இதில் விற்றமின் சி ,பி மற்றும் உயிர்ச்சத்துக்கள் உள்ளன. இதை அடிக்கடி உட்கொண்டு வந்தால் சிறு நீர் பெருகும், இருமலை குனமாக்கும். வாய்வுத் தொல்லை உள்ளவர்கள் இதை அதிகமாக உண்டால் வயிற்று வலியை ஏற்படுத்தி விடும். அதனால் அவர்கள் வெண்டிக்காயை அளவோடு எடுத்து கொள்வது அவசியம்.



**அவரைக்காய்** - இதிலும் பல வகைகள் உண்டு. வெள்ளை அவரை பிஞ்சை நோயாளிகள் உண்ணும் காலத்தில் பத்திய உணவாக உண்ணலாம். இதை சமைத்து உண்டால் உடலை வலுவாக்கும். சூடான தேகம் கொண்டவர்களுக்கு இது மிகவும் சிறந்தது. இரத்த அழுத்தம் உள்ளவர்களும் இதை விரும்பி சாப்பிடலாம்.



**புடலங்காய்** - நீர் சத்து அதிகம் கொண்ட காய் இது. சூடான தேகம் கொண்டவர்கள் இதை அதிகளவில் உணவில் எடுத்து கொள்வது சிறந்தது. தொடர்ந்து புடலங்காய் சாப்பிட்டால் தேகம் செழிப்பாக காணப்படும். இது எழிதில் ஜீரணமாகி நல்ல பசியை உண்டு பண்ணும். வாதம், பித்த பிரச்சினைகளை போக்கும். வயிற்று பொருமல், வயிற்று பூச்சி பிரச்சினைகளுக்கும் சிறந்தது.

## வீட்டுக் குறிப்புக்கள்

1 கண்ணாடிப் பாத்திரங்களில் உள்ள கறையை நீக்க உப்பும் வினிகரும் உபயோகித்து கழுவலாம்.

2 லிப்ஸ்டிக் கறையை போக்க யுக்லிப்டஸ் ஒயில் உபயோகி யுங்கள்.

3 எண்ணெய் பசை உள்ள பாத்திரங்களைச் சுத்தப்படுத்த முதலில் கடலை மாவைத் தடவி பின் சோப் நீர் கொண்டு அலம்புங்கள்.

4 எண்ணெய் கறையை அழிப் பதற்கு, எலுமிச்சம் பழத்தை இரண்டு துண்டாக வெட்டி அதை உப்பில் வைக்கவும். பின்னர் அந்த துண்டுகளை வைத்து தேய்க்கவும்.

5 பாதிரங்கள் சமையலின் போது அடிப்பிடித்துவிட்டால் அதில் சோப் நீரை நிரப்பி 10 நிமிடங்கள் கொதிக்க வைத்தப் பின் கழுவுங்கள்.

6. அதிகமாக வயிற்றுபோக்கு ஏற்படும் பொழுது வெந்தயம் + தயிர் 1 கப் சாப்பிட்டால் வயிற்று பொருமல் அடங்கும்.

7. சூரிய ஒளியில் பாதிக்கப்படும் நரம்புகளையும், தோல் பகுதி களையும், தயிர் தனது ஆரோக் கியமான கலவைகளால் பாது காக்கிறது. பழச்சாறு உடலுக் குத் தேவையான வைட்டமின் 'சி'யை அளிக்கிறது. தயிரும் பழச்சாறுக்கு இணையான சத்துக்களைக் கொண்டுள்ளது.

8. மட்டன் சிக்கன் இவற்றை அரைக்க மிக்ஸி பயன்படுத் தப்பட்டால் அதன் பின் 2 பிரட் துண்டுகள் போட்டு அரையுங்கள். பிசுக்கும் வாடையும் போய்விடும்.

9. தோல் உரித்த உருளைக் கிழங்குகளை கெடாமல் வைப்பதற்கு சில துளிகள் வினிகரைத் தெளித்து ஃப்ரிட்ஜில் அதை வைக்கவும்.

# குளிரூட்டியில் உணவுப் பொருட்களை சரியாக பேணுவோம்



மீன் இறைச்சி இவற்றை சேமிக்கும் போது தேவையில்லாத பகுதிகளை நீக்கி விட்டு தேவைக்கு அளவான துண்டுகளாக்கி பொலித்தீன் பைகளில் இட்டு அதி குளிரூட்டிக்குள் வைத்து சேமிக்க வேண்டும்.


காய் கறிகள் இவற்றில் பழுதடைந்த மற்றும் தேவையற்ற பகுதிகளை துவாரமுள்ள பொலித்தீன்க ளில் இட்டு குளிரூட்டியில் வைத்து பேண முடியும்.

பழங்கள் பழங்களை துவாரமுள்ள பொதிக்குள் இட்டு குளிரூட்டியின் கீழ் பகுதிக்குள் வைக்க வேண்டும்.

முட்டைகுளிரூட்டியின் கதவினுள் சேமிப்பு பகுதியில் வைக்கலாம் நீரில் கழுவுவது முட்டையை பழுதடைய செய்வதால் துடைத்து சேமிக்க வேண்டும்.

அதி குளிரூட்டியில் இருந்து எடுத்த உணவை சமைக்கும் முன் உணவை அரை வெப்ப நிலைக்கு வரும் வரை வைக்க வேண்டும். இல்லா விடின் மீன் இறைச்சியின் நடுப் பகுதி குளிராகி இருப்பதால் நடுப்பகுதி வேகாது. இதனால் நுண்ணங்கிகள் அழியாமல் வேகமாக வளர்ச்சியுற்று உணவை பழுதடைய செய்யும்.







கிறிஸ்மஸ் வருடப்பிறப்பு என்று வந்து விட்டால் யாழ் நகரப் பகுதி கடைகள் கலர் கலராக களைகட்ட தொடங்கி விடும். ஆடைகளின் சாம்ராச்சியம் எது என்று தெரியாமல் எல்லா கடைகளையும்பார்த்து மயங்கிடுவர் நம்ம பெண்கள்.

எதில் ஆசையுள்ளவர்களாக உள்ளார்களோ இல்லையோ ஆடைகளை தெரிவு செய்வதில் நம்ம பெண்கள் கொள்ளை பிரியர்கள். அதிலும் ஒரு பண்டிகை என்று வந்து விட்டால் சொல்ல வேண்டியதில்லை. வித்தியாசமான ஆடைகளை தெரிவு செய்ய வேண்டும் புதிய மொடலை தெரிவு செய்ய வேண்டும். இந்த வருடம் ஆலயத்தில் எல்லோரும் என் ஆடையை திரும்பி பார்க்கிற போல அழகா ஆடை அணிந்து அலங்காரம் பண்ணி போக வேண்டும். இப்படி பல வித பெண் மனங்கள்.

எது எப்படி என்றாலும் வருகின்ற கிறிஸ்மஸ் மற்றும் வருடப்பிறப்பு செலக்ஸன் உங்களுக்கு சிறப்பா அமையனுமா? ஆலயத்திற்கு செல்லும் போது அணிவதற்கு

**இந்த வருடம் ஆலயத்தில் எல்லோரும் என் ஆடையை திரும்பி பார்க்கிற போல அழகா ஆடை அணிந்து அலங்காரம் பண்ணி போக வேண்டும். இப்படி பல வித பெண் மனங்கள்.**

# பெண்களுக்கான கிறிஸ்மஸ் வருடப்பிறப்பு செலக்சன்

எப்படி பட்ட சல்வார், சாறியை வாங்குவது என்று குழப்பமாக உள்ளதா? இதோ உங்களுக்கான செலக்ஸன்.

சல்வார் அணிபவர்கள் உங்களுக்கு ஏற்ற விலைக்கேற்ப நெற் மற்றும் கல்லு வேக் பதித்த சல்வார்களை தெரிவு செய்து கொள்ளலாம். நீங்கள் உயரமான சற்று குண்டான தோற்றம் உடையவர் என்றால் பாதம் முட்டும் முழு நீள சல்வார்கள் உங்களுக்கு பொருத்தம் இல்லை நீங்கள் குள்ளமானவர் என்றால் முதலில் உங்கள் உடல் பருமனை கவனியுங்கள். நீங்கள் குண்டானவரா அப்படியாயின் நீள சல்வார் ஓகே தான். இல்லை நீங்கள் மெல்லியவரா உங்களுக்கு கொட்டன் இல்லை நெற் கட்டை சல்வார்கள் உடலோடு ஒட்டிய படி போடுவது தான் எழுப்பமாக இருக்கும்.

இல்லை நீங்கள் சாறியை தெரிவு செய்யப் போகின்றீர்களா? அப்படியாயின் உங்கள் வயதினை கவனித்தால் போதும். இளமையானவராயின் அதாவது 2035 வயதிற்குட்பட்டவராயின் உங்களுக்கு என்றே தனித்துவமான நெற் சாறிகள் புதிய மொடல்களில் இரு கலர் சாறிகள் என ஏராளம் வந்து விட்டன. வாங்கி அணியுங்கள் இளமை மேலும் துள்ளியமாகும். இல்லை நீங்கள் 50 வயதிற்கு மேற்பட்டவரா? வளர்ந்த பிள்ளைகள் உள்ளனரா? உங்களுக்கென்றே அழகை மெருகூட்டும் சிம்பிள் கொட்டன் வேக் சாறிகள். முற்றும் சிம்பிள் பட்டு சிம்பிள் வேக் சாறிகள் கடைகளில் காத்திருக்கின்றன. வாங்கி அணியுங்கள்...கிறிஸ்மஸ் வருடப்பிறப்பை இனிதே கழியுங்கள்.
















நாடியா
nadiyanice@yahoo.com

பன்னியை பார்த்தாலும் பாய்ந்து போய் செல்பி எடுத்துக கொள்வபவன்தான் தமிழன். அதை பேஸ்புக்கில் போட்டு 'அந்தாட்டிக் காவிலிருந்து வந்த அற்புத பன்றி' என ஒரு பீலாவையும் அவிழ்த்து விட்டுவிடுவான். பின்னர் பார்க்க வேணுமே. கொமண்ட் பகுதி கொளுத்திப் போட்டதைப் போலிருக்கும். ஆடை நீக்கிய பால் கொடுக்கும் அந்தாட்டிக்கா பன்றி என்றும் ஒருவன் எடுத்துவிடுவான். இதனை பார்த்த 'பேஸ்புக் ஜேர்னலிஸ்ட்' ஒருவன் மற்றநாள் செய்தி ஆக்கிவிடுவான். 'கொப்பி பேஸ்ட்' வெப்சைற் எல்லாவற்றிலும் அது காட்டுத்தீயாக பரவ, பாவம் அப்பாவி சனங்கள். நம்பித் தொலைப்பார்கள். இதுதான் தமிழன்.

மக்களே... அதாவது என்ன சொல்கிறோம் என்றால், தமிழனிற்கென்று சில தனிக்குணங்கள் உள்ளன. செல்பி எடுத்து பேஸ்புக்கில் பீலா விடுபவன், அற்புத பன்னி என அதற்கு மேலே அவிழ்த்து விடுபவன், செய்தியாக்கும் ஜேர்னலிஸ்ட், நம்பும் காதில்பூ கந்தசாமி... இப்படி எத்தனை வெரைட்டியான தமிழர்கள் நம்மத்தியில். ஒவ்வொரு வகையானவர்களிற்கும் ஒவ்வொரு குணம். தமிழனே நோட்டீஸ் ஒட்டி இதனை பீற்றிக்கொள்வான். தனிக்குணம் உள்ளதென்பதை ஊரறிய சொல்வதில் நம்மாட்களிற்கு அலாதி பிரியம்.

மற்ற இனங்களை விட நம்மாட்களிற்கு தனிக்குணங்கள் இருக்கிறதோ இல்லையோ, நம்மாட்களிற்குள் நிறைய தனித்தனிக் குணங்கள் உள்ளன. உதாரணமா, பகலில் எப்.எம் றோடியோவில் போன் பண்ணி பேசி பாட்டுக் கேட்பவன் பரோட்டா மாஸ்ரராகத்தான் இருப்பான். இருக்க சீற் இருந்தும், காதில் ஹெட்போனுடன் பஸ்சில் நின்று பிரயாணிப்பவன் நிச்சயம் தூர இடத்திலிருந்து ஏதோவொரு ஒருமாத கோர்ஸ் செய்ய நகரத்திற்கு வருபவனாக இருப்பான். சம்பந்தா சம்பந்தமில்லாமல் பேசுபவனாக இருந்தால் அரசியல்வாதியாக இருப்பான். அல்லது விரைவில் ஆகிவிடுவான்.

இப்படி நம்மாட்களிற்கு நிறைய குணங்கள்.

நம்மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் சில 'வெரைட்டியான பேர்வழிகள்' பற்றிய விளக்கமான குறிப்பிது.

### 'பொளபொள' பேஸ்புக்போராளிகள்

பக்கத்துவீட்டுக்காரன் பத்துநாள் சாப்பிடாமல் இருப்பான். பக்கத்து ஊரில் பத்தடி உயரத்திற்கு வெள்ளநீர் நிற்கும். பத்துரூபா பிச்சைகேட்டபடி பின்னாலேயே ஒரு சிறுமி அலைவாள். நம்மாளின் கண்ணிற்கு தெரியாது. எங்காவது நாலுபேர் 'Donated for tamilnadu', 'Help for tamilnadu' என எழுதியபடி நிற்பார்கள். அதனை உடனே படமும் எடுத்து பேஸ்புக்கில் போட்டு, 'உலகத்தமிழனமே உனக்கு கண்ணில்லையா? வெள்ளத்திலிருக்கும் சனத்தை மீட்க வீதிக்கிறங்க மாட்டாயமா?' என ஒரு சந்தக்கவிதையும் எழுதிவிட்டு, யாராவது ஒரு பிகருடன் கடலை போட்டுக் கொண்டிருப்பார்கள் பாருங்கள், அவர்கள்தான் பேஸ்புக் போராளிகள்.

சும்மா கைஓங்கினாலே 'ஒன்று'க்கு போய்விடும் பேர்வழியாகவோ, பொதுஇடத்தில் நடக்கும் பிரச்சனைகளை தனக்குள்ளேயே சமாதனம் சொல்லி கடந்து செல்பவராகவோ இருப்பார்கள். ஆனால் பேஸ்புக் என்று வந்துவிட்டால், 'பொளபொள' என 'பொளந்து' தள்ளுவது இவர்களின் தனிக்குணம்.

### 'அப்பப்ப' சிவில் சமூகம்

இது யாராடா புது குறூப் என மண்டையை பிய்க்காதீர்கள். இப்படியொரு குறூப் அண்மைக் காலமாக தமிழ்ப்பகுதிகளில் ஊடாடி திரிகிறதாம். கிட்டத்தட்ட கிரீஸ் மனிதனை போல. கிறீஸ் மனிதனும் யாரென்று இன்றுவரை அடையாளம் காணப்படவில்லை. அப்பப்போது பத்திரிகைகளில் அறிக்கைவிடும் சிவில் சமூக பிரதிநிதிகளும் யாரென்று சனங்களிற்கு தெரியவில்லை.

பிரச்சனை எல்லோருக்கும் தெரிந்ததாக இருக்கும். தீர்வும் எல்லோருக்கும் தெரிந்ததாக இருக்கும். இரண்டையும் யாருக்கும் புரியாமல் கதைத்தால் அந்தாள் சாட்சாத் 'சிவில் சமூகபிரதிநிதி'தான்.

ஊரில் ஊருப்பட்ட பிரச்சனையிருக்கும். அரசியல்கைதிகள் பிரச்சனை, காணாமல் போனவர்கள் பிரச்சனை, அரசியல்தீர்வு முயற்சி எதிலும் கலந்து கொள்ள மாட்டார்கள். 'மக்கள் இதைத்தான் கேட்கிறார்கள்' என அறிக்கைவிட்டு, அடுத்த காரியம் பார்க்க போய்விடுவார்கள்.

இதில் பெரும்பாலும் வைத்தியர்கள், சட்டத்தரணிகள் இருப்பார்கள். காய்ச்சலுக்கு பனடோல் எடுக்க செல்வதென்றாலும் ஆயிரம் ரூபா புக்கிங், வழக்கு தவணையொன்றிற்கு போய்வர சுளையாக இவ்வளவு வேண்டுமென அடம்பிடிக்கும் ஆட்கள், ஓய்வுநேரத்தில் 'சிவில் சமூகம்' என மக்கள் பிரச்சனை பற்றி கதைப்பார்களாம்.

### 'ஐ சப்போர்ட்' இலக்கியவாதிகள்

நீங்கள் எதுவும் எழுதியிருக்க தேவையில்லை. எதுவுமென்றா சொன்னேன்... மன்னிக்கவும், பேஸ்புக்கில் ஏதாவது எழுத வேண்டும். நான்குபேரை செற் பண்ணி வைத்திருக்கவும் வேண்டும். எல்லாம் ஓகேயா? காய்க்கும் மரமொன்றை பார்த்து கல்லெறிய வேண்டும். அதாவது, யாராவது பிரபலங்களை சொறிய வேண்டும்.

அவர்கள் பெரும்பாலும் கண்டு கொள்ளமாட்டார்கள். நம்மாள் இரண்டுநாள் கொம்பியூட்டரின் முன்னால் இருந்து பார்ப்பார். கண்ணெல்லாம் பூத்ததுதான் மிச்சம். நான்குபேரையும் சேர்த்து ஒரு ஐடியா பண்ணுவார். நம்மாள் கேட்ட கேள்வியை எல்லோரும் எதிர்க்கிறார்கள், கருத்து சுதந்திரத்தை பாதுகாப்போம் என வரிந்து கட்டிக்கொண்டு ஆளாளுக்கு பேஸ்புக்கில் 'I support ...' என அவிழ்த்து விடுவார்கள்.

எதுவுமே நடக்காது. ஆனால் உலகமே மொத்தமாக சேர்ந்து ஒரு அப்பாவியை கும்மியெடுப்பதை போல பேஸ்புக்கில் ரியாக்சன் காட்டினால் கண்டிப்பாக அது நமது இளம் இலக்கிய கூட்டம்தான்.


### 'கோக்குமாக்கு' கொம்மியூனிஸ்ற்

கொஞ்சம் வயது போனவர்கள் இருப்பார்கள். எப்பொழுதும் முகத்தை உர் என்று வைத்துக்கொண்டு, ஆளையாள் அடித்துவிடுபவர்களை போல விவாதித்துக் கொண்டிருப்பார்கள்.

இலங்கையில் போர்க்குற்றம் நடந்ததென ஒரு தரப்பு சொல்லும். சர்வதேச விசாரணையா, கூடவே கூடாதென இன்னொரு தரப்பு அடம்பிடிக்கும். இவர்களைவிட இன்னொரு குறூப் கிளம்பும். 'போர்க்குற்ற விசாரணையின் மூலம் அமெரிக்கா அடைய நினைக்கும் ஏகாதிபத்திய நலன்கள்' என்றொரு மீற்றிங் போடுவார்கள். நாலுபேர் கூடி நாள் முழுக்க அடிபடுவார்கள். அவர்கள்தான் 'கொம்யூனிஸ்ற் தோழர்கள்'.

இலங்கையில் போர்க்குற்றம் நடந்ததா இல்லையா? சர்வதேச விசாரணையா, உள்ளக விசாரணையா என உள்நாட்டுக்குள் எல்லோரும் தலையை பிய்த்துக் கொண்டிருக்க, அதற்குள் அமெரிக்காவை கொண்டு வந்து கோர்த்து, கோக்குமாக்கு பண்ணுவது அவர்களின் இயல்பு.

கிளிநொச்சியில் ஆள் மூழ்கும் வெள்ளம் என்றால், தொண்டையை செருமிவிட்டு 'அமெரிக்கா' என யாராவது தொடங்கி, எதிரில் நிற்பவரை தெறித்து ஓடவைப்பது நம்மாட்களின் ஸ்பெசல்.






தமிழ் மாமன்றத்தின் வாசிப்பும் அனுபவப்பகிர்வும் எனும் வாசிப்புத் தொடர்பான இம்மாத கலந்துரையாடல் நிகழ்வு 05.12.2015 அன்று வவுனியா பொதுசன நூலக கேட்போர் கூடத்தில் சிறப்புற நடந்தது. இந் நிகழ்வில், வாசிப்பில் ஆர்வமுள்ள பல தரப்பட்ட வயதுள்ள பலர் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.



## நம்நாட்டு மோட்டார் சைக்கிள்!

நுவரெலியாவை சேர்ந்த 32 வயதான விவசாயியொருவரின் அசத்தல் படைப்பிது. முழுக்க முழுக்க ஏ4 காகிதங்களினால் இந்த மோட்டார்சைக்கிளை உருவாக்கியுள்ளார். இதற்காக 10,000 ஏ4 தாள்களை செலவிட்டுள்ளார். விவசாய பணிக்கிடையில் மனைவி, குடும்பத்தாருடன் இப்படியான கைப்பணிகளில் ஈடுபடுகிறார். இவரது கைப்பணிகளிற்கு அந்தப்பகுதியில் நல்ல வரவேற்பு உள்ளது.






## கரடிக்கொலை!

முல்லைத்தீவின் பழைய முறிகண்டிப்பகுதியில் நடந்தது. கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த புகையிரதத்துடன் கரடியொன்று மோதி இறந்துள்ளது. கரடியின் தலைமட்டும் தனியாக துண்டிக்கப்பட்டு விசப்பட்டிருந்தது. முல்லைத்தீவு காட்டு பகுதியில் புகையிரதத்துடன் விலங்குகள் மோதி இறக்கும் சம்பவங்கள் அதிகரித்து செல்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## என்ன கொடுமை சார்!

உலகத்தில் ஏன் இவ்வளவு அழிவுகளும் நடக்கிறதென யோசிக்கிறீர்களா? இப்படியான கொடூரங்கள் நடப்பதால்த்தான். ஏதேதோ விளையாட்டெல்லாம் முடிந்து, இப்பொழுது இப்படியொரு விளையாட்டு பிரபல்யமடைகிறது. இதன் பெயர் 'கொண்டம் சலஞ்'. அதாகப்பட்டது ஆணுறை சவால். ஆணுறையை வைத்து என்ன சவால் என எக்குத்தப்பாக யோசிக்காதீர்கள். ஆணுறையை தண்ணீரால் நிரப்பி, தலையில் போட்டுக்கொள்ள வேண்டுமாம்.



## சைக்கிளாம்!

சத்தியமாக நம்புங்கப்பா... இது சைக்கிள்தான். டொச் நாட்டின் சைக்கிள் கழகமொன்று ஆறஅமர உட்கார்ந்து, மெகா சைக்கிள் ஒன்றை உருவாக்கியுள்ளது. இதன் நீளம் 117 அடிகள். உலகத்தின் நீளமான சைக்கிள் என்ற கின்னஸ் சாதனையையும் படைத்துவிட்டது. இதனை இரண்டுபேர் செலுத்தலாம்.



## அட... முத்தம்!

முத்தத்தால் என்னவெல்லாம் செய்யலாம்? எல்லாம் செய்யலாம் போலுள்ளதைத்தான் இந்தச் சம்பவம் காட்டுகிறது. சீனாவில் வாலிபன் ஒருவன் தற்கொலைக்கு முயன்றுள்ளான். உயரமான இடத்திலிருந்து குதிக்கப் போவதாக கூறிக்கொண்டிருக்க, அங்கு சென்ற பெண்ணொருவர் அவனை பேசி சமாதானப்படுத்தி அருகில் சென்று, நீண்ட 'உம்மா' கொடுத்துள்ளார். பையனும் அதில் கிறங்கியிருக்க, 'சட்டுபுட்டென' அங்கு சென்றவர்கள் அவனை பிடித்து காப்பாற்றிவிட்டனர்.



## கிளிநொச்சி முதலை

கிளிநொச்சியில் மழைவெள்ளத்துடன் புதிய ஆபத்தாக முதலைகளும் உருவெடுத்துள்ளன. திருவையாறு பகுதியில் ஊருக்குள் வந்த இராட்சத முதலையொன்று பசுக்கன்று ஒன்றை வேட்டையாடியுள்ளது. பின்னர் பொதுமக்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டு வனஜீவராசிகள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டது.








இப்பத்திரிகை நோர்சீ மீடியா (பிறைவேற்) லிமிற்ரட் நிறுவனத்தால்
172, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள ஈஸ்வா டிஜிற்றல் பிரஸில் அச்சிட்டு 13.12.2015 அன்று வெளியிடப்பட்டது